வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 28.03.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 109 பக்கங்கள் : 16




# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதியிடம் கோரினார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், மார்ச் 28

“தொல்பொருள் திணைக்களத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையில் அமைந்திருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது.

அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிசிவலிங்கம் முழுமையாகப் பெயர்க்கப்பட்டு உடைத்து வீசப்பட்டுள்ளது. இதேபோன்று, அங்கிருந்த விநாயகர், அம்மன் சிலைகள் பெயர்த்து அகற்றப்பட்டுள்ளன. அத்துடன், அங்கிருந்த சூலங்களும் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதியாகிய நீங்கள் உடன் தலை யிட்டு அந்த ஆலயத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.”

15



## ஐ.எம்.எவ் கடன் தெளிவுபடுத்தல் 30ஆம் திகதி!

கொழும்பு, மார்ச் 28

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் அங்கீகாரம் குறித்து இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்குத் தெளிவுப்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இந்த நாட்டின் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் கலந்துரையாடல்களை தொடர எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆளுநர்

15

வெடுக்குநாறி விக்கிரகங்கள் அழிப்பு:

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிர்வாகத்தினர் நேற்று முறைப்பாடு!

வவுனியா, மார்ச் 28

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

15



## கச்சதீவில் அந்தோனியார் தேவாலயம் தவிர வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை!

### மறுக்கிறது இலங்கைக் கடற்படை

கொழும்பு, மார்ச் 28

கச்சதீவு பகுதியில் புனித அந்தோனியார் தேவாலயம் தவிர வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை என இலங்கைக் கடற்படையினர் நேற்று தெரிவித்தனர்.

கச்சதீவு தீவில் வேறு எந்த விகாரை அல்லது மத நினைவுச்சின்னத்தை நிர்மாணிக்கும் எண்ணம் கடற்படைக்கு இல்லை என்று கடற்படையினர் வலியுறுத்தினர்.

கச்சதீவில் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை அடுத்து கடற்படையினர் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளனர்.

நிலப்பரப்பில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவான கச்சதீவைச் சுற்றி பாதுகாப்பைக் கையாள்வதற்காக இலங்கை

15

## வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத் தலைவராக ஆளுநர் ஜீவன்

கொழும்பு, மார்ச் 28

வடக்கு மாகாண அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணை தலைவராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே வட மாகாணத்தில் உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சர் காதர் மஸ்தான், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வவுனியா மாவட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் ஆகியோர் அபிவிருத்திக் குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வடமாகாணத்தில்

15

## ஈ.பி.டி.பியினர்தான் குழப்ப முயன்றனர்!

### வசந்த முதலிகே குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியின் அங்கத்தவர்களே குடிபோதையில் வந்து மிரட்டல் விடுத்தனர் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

எனினும், இவ்வாறான மிரட்டல்கள் மூலம் தமது கூட்டத்தை குழப்ப மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

15



## வீதியில் பயணித்த வான் மரத்துடன் மோதி விபத்து!

### மிருசுவிலில் சாரதி உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த ஹைஏஸ் வாகனம் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் இருந்த மரம் ஒன்றின் மீது மோதி இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியது.

இதன்போது, சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

15

## டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தலொன்று நடத்தப்படும்!

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 28

டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தலொன்று நடத்தப்படும் என பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு திரும்பும்போது, ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார். (அ)

## மக்களின் மனநிலை அறியாமல் வசந்த முதலிகே போராடுகிறார்

### குற்றச்சாட்டை மறுக்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். பல்கலைக்கழகத்தின் நிலைப்பாட்டையும் மக்களின் மனநிலையையும் அறியாமலேயே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடத்தியதாக கூறியுள்ள ஈ.பி.டி.பி, அதற்கு எதிராகச் சத்தமிட்ட கும்பல் தமது கட்சியினர் அல்லவென்றும் விளக்கமளித்துள்ளது.

நேற்றுமுன்தினம்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒருநாள் இந்த ஊர்க்குருவிக்கு கடும் பசி. மதியவேளையில் வழக்கமாக உணவு உண்ணும் உணவகம் அன்று ஏனோ திறக்கவில்லை. அதற்கு எதிராக புதிதாகத் திறந்த அந்த உணவகத்தில் இன்று உணவு உண்ணலாம் என்ற நினைப்பில் அங்கு சென்று, அவர்களிடமிருந்த உணவை உண்டுவிட்டு வந்து, கல்லாப்பெட்டியில் அமர்ந்திருந்த முதலாளியிடம் காசு கொடுப்பதற்காக நின்றேன்.

முதலாளி கேட்டார், 'எப்படி எங்கள் சாப்பாடு?' என்று.

நான் சொன்னேன், 'சாப்பாடு நல்லதுதான். ஆனால் நான்தான் பிழைவிட்டுவிட்டேன்' என்று.

அவர் ஒன்றும் புரியாதவராக, 'அப்படி என்னதான் பிழை விட்டீர்கள். சாப்பிடும்போது எதுவும் பிழை விட்டதாகத் தெரியவில்லையே' என்றார்.

நான் சொன்னேன், 'இல்லை, நான் நேற்று உங்கள் கடைக்கு வந்திருக்க வேண்டும்' என்று.

'அதுக்கென்ன இனி முன் கடைக்குப் போகமாட்டியள் தானே. டெய்லி இனி இங்கயே வாங்க' என்றார்.

அவருக்கு நான் சொன்னது புரியவில்லை என்பது தெரிந்தது.

'சாப்பாடு நல்லம்தான். ஆனால், நான் நேற்று வந்திருந்தால் அது நல்லா இருந்திருக்கும்' என்றது அவருக்கு புரியவில்லை. அவர் இன்று பரிமாறிய சாப்பாடு நேற்றுச் செய்ததுதானே என்று நான் சொன்னதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

அந்தச் செய்தியைப் படித்தபோது இந்தச் சம்பவம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

'பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதன் ஊடாக வடக்கில் காணிப் பிரச்னை, இராணுவ மாயமாக்கல் பிரச்னை, வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் ஏனைய பிரச்னைகளை தீர்ப்பதற்கான முதல் படியாக அமையுமென' அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

நீங்கள் நேற்று சாப்பிட வந்திருக்கவேணும் என்று சொன்னதுபோல, ஆகக்குறைந்தது, நீங்கள் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்க ஏற்பாட்டாளராக வந்த உடனாவது வந்திருக்கவேண்டாமா?

பயங்கரவாத தடைச் சட்டம் இன்று நேற்று கொண்டுவரப்பட்டதல்ல. அது கொண்டுவரப்பட்டு இன்று நாற்பத்தி நான்கு ஆண்டுகளாகின்றன.

'அறகலய' போராட்டத்தின் பின்னர் முதல்தடவையாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யயப்பட்ட சிங்கள இனத்தவர் இந்த வசந்த முதலிகே. அதுவரை அந்தக் கொடூர சட்டத்தால் தமது வாழ்க்கையை முழுமையாகத் தொலைத்தவர்கள் நம்மவர்கள் பலர். அதிகம் ஏன் இன்றும்கூட அந்தச் சட்டத்தின் கொடுமை காரணமாக எதுவித விசாரணையும் இன்றி, சிறைக்குள் காலத்தைக் கடத்தும் தமிழர்கள் பலர்.

அப்போதெல்லாம் அதுபற்றி கண்டுகொள்ளாத இவர்கள், இப்போது அது தங்கள் மீது பாய்கின்றபோது யாழ்ப்பாணத்துக்கு வந்து பயங்கரவாத தடைச் சட்டம் பற்றி தமிழர்களுக்கு வகுப்பெடுக்கின்றனர்.

அதிகம் ஏன்? இவர் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்த காலத்தில்தான் நமது தமிழரசு கட்சி ஒரு வாகனப் பேரணியை நடத்தி நாடெங்கும் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக கையெழுத்துப்பெறும் போராட்டம் ஒன்றை நடத்தியது.

அப்போது, இந்த தமிழரசின் வாகன தொடரணி போராட்டத்துக்கு அந்த மாணவர் அமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என்று எதிர்பார்ப்பு இருந்திருக்கலாம். அவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் நின்று பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக குரல் கொடுப்பதை விடுத்து அந்தப் போராட்டத்துக்கு அல்லவா தமது முழுமையான ஆதரவை வழங்கியிருக்க வேண்டும். அப்படியோர் ஆதரவை வழங்கியிருந்தால் பல ஆயிரக்கணக்கானவர்கள் அந்த போராட்டத்தில் திரண்டிருக்கவேண்டாமா?

அப்போதுகூட வாளாவிருந்துவிட்டு, ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்து மக்கள் மனநிலையை அறிந்துவிட்டு, மீண்டும் வந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு தமிழ் மக்களை உசுப்பேத்தும் வேலையை செய்வது ஏன் என்பது புரிந்துகொள்ள முடியாததல்ல.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டத் திருத்தத்தை சமர்ப்பிக்கப் போவதாக அரசாங்கம் அண்மைக்காலமாக திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கின்றபோது, அதற்கு எதிராக குரல்கொடுத்துவிட்டு, அரசாங்கம் தாமாக புதிய சட்டத்தை கொண்டு வருகின்றபோது தமது போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாக காட்டிக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பும் புரிந்துகொள்ளக்கூடியதே.

சரி நாளை குருந்துர்மலையிலும் வெடுக்குநாறியிலும் கன்னியாவிலும் அரசு செய்யும் பௌத்தமயமாக்கலுக்கு எதிராக ஒரு போராட்டம் நடத்துவோம் வருகிறீர்களா என்று அவரிடம் கேட்டுப்பார்த்தால் தெரியும் அவரின் தமிழ் மக்கள் மீதான கரிசனை.!

நாட்டில் அடுத்த தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்தான் என்று ஜனாதிபதி முடிவெடுத்துவிட்டதால் தெற்கு அரசியல்வாதிகளுக்கு இப்போது தமிழ் மக்கள் தெரியத் தொடங்கியிருக்கிறார்கள்.

**- ஊர்க்குருவி**

# மட்டக்களப்பில் குருக்களிடம் பொலிஸ் வேடத்தில் கொள்ளை

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மாரி அம்மன் கோவிலின் குருக்களிடம், பொலிஸார் எனக் கூறி கொள்ளையிட்ட நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

69 வயதான குருக்கள் தனது மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றபோது, அவரது மோட்டார் சைக்கிளை பின்தொடர்ந்து சென்ற இருவர், தாங்கள் பொலிஸார் என்று கூறி அவரை நிறுத்துமாறு கூறியுள்ளனர்.

அவரிடம் இருந்த 3 பவுன் தங்கச் சங்கிலி, பையில் இருந்த ரூ.110,000 ரொக்கம் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் கொள்ளையடித்துவிட்டு அவர்கள் தப்பிச் சென்றனர்.

குருக்கள் பழுகாமத்தில் வசிப்பவர். குருக்கள் மூலம் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மூளைச்சாவடைந்த மாணவியின் உறுப்புகள் பொருத்தப்பட்ட ஏழு பேர் உயிர்பிழைத்தனர்!

கொழும்பு, மார்ச் 28

மூளைச்சாவு அடைந்த 19 வயதுடைய பாடசாலை மாணவியொருவரின் இதயம் மற்றும் நுரையீரல் குடும்பத்தாரின் அனுமதியுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சுகவீன முற்றிருந்த மற்றுமொரு பெண்ணுக்கு பொருத்தப்பட்டு அவர் குணமடைந்து வருவதாக சத்திர சிகிச்சையில் கலந்துகொண்ட விசேட வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

மூளைச்சாவு அடைந்த பாடசாலை மாணவியின் உடல் உறுப்புக்கள் 7 பேருக்கு பொருத்தப்பட்டுள்ளது.

குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியில் உயர்தரம் பயிலும் 19 வயதுடைய விஹகனா ஆரியசிங்க என்ற மாணவி திடீர் உடல் நலக் குறைவால் மூளைச்சாவு உயிரிழந்த நிலையில் அவரின் உடல் உறுப்புக்கள் இவ்வாறு வேறு நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

குருநாகல், அம்பன்பொல நகரில் வசிக்கும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் விஹகனா ஆரியசிங்க இளைய பிள்ளையாவார்.

அவருக்கு ஒரு மூத்த சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைந்த விஹகனா குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியில் வணிக ரீதியில் உயர்தரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று வந்தவர் ஆவார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூளைக்குள் ஏற்பட்ட கட்டி காரணமாக மாணவி மூளைச்சாவு அடைந்துள்ளார். விஹகனா மூளைச்சாவு அடைந்து உயிரிழந்த நிலையில் அவரது இதயம் மற்றும் நுரையீரல் மற்றுமொரு நோயாளிக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும் விஹகனாவிடம் இருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும், ஆபத்தான நிலையில் உள்ள இரண்டு நோயாளிகளுக்கு வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளன.

விஹகனாவிடம் இருந்து எடுக்கப்பட்ட கல்லீரல் மற்றும் கண்களின் சவ்வுகள் மேலும் மூன்று பேரின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவியுள்ளன.

விஹகனாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உறுப்புகள் மூலம் மொத்தம் 7 பேர் உயிர் காக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் அறுவைச் சிகிச்சை இலங்கை, இந்திய வைத்தியர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதயம் மற்றும் நுரையீரல் செயலிழப்பு காரணமாக ஆபத்தான நிலையிலிருந்த ஒருவருக்கு இந்த இரண்டு உறுப்புகளும் மாற்றப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் இந்த உறுப்புகள் தனித்தனியாகப் பொருத்தப்பட்டிருந்தாலும், ஒரே நேரத்தில் இதுபோன்ற உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை செய்வது இலங்கையில் இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதிய நிபந்தனைகளை பூர்த்தி செய்வது மிகவும் கடினம்

## பேராசிரியர் வெளியிட்ட தகவல்

கொழும்பு, மார்ச் 28

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாது என பேராதனை பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை பேராசிரியர் வசந்த அதுகோரள தெரிவித்தார்.

இந்த நிபந்தனைகள் ஒன்றுக்கு ஒன்று முரண் பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டியில் டொலர் கையிருப்பை 10.9 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கவேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எனினும், கடந்த 2022ஆம் ஆண்டில் நாட்டின் டொலர் கையிருப்பு வெறும் 1.9 பில்லியன் டொலர்கள் எனவும் மூன்றாண்டு இடைவெளியில் பாரிய தொகையில் டொலர் கையிருப்பை அதிகரிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கடன் செலுத்துகைகளை குறைக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டாலும் குறுகிய காலத்தில் கடன் செலுத்துகைகளை குறைக்க முடியாது என அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஓரளவு பூர்த்தி செய்ய வேண்டுமாயின் ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து, அரச நிறுவனங்களை செயற்திறன் மிக்கதாக்க மாற்றவேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், தற்போதைய அரசியல் பொருளாதார சூழ்நிலையில் இவ்வாறான சாதக மாற்றங்களை அவதானிக்க முடியவில்லை எனவும் இதனால் சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளை பூர்த்தி செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள குறிப்பிட்டார். (அ)

# விவசாய திட்டமிடல் அதிகாரி படுகொலை!

கொழும்பு, மார்ச் 28

தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு விவசாயத்திட்டமிடல் அதிகாரியான 30 வயதுப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அதிகாரி கடமைக்காக காரியாலயத்திற்குச் செல்லும்போது தொழில் முறையில் ஏற்பட்ட பிரச்னையின் காரணமாகவே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
28.03.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கடவுள்களை காப்பாற்ற போராடும் மக்கள்?

வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள சிவலிங்கம் சிதைக்கப்பட்டு, அப்பகுதியை பௌத்த மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் அதன் வேலையை மீண்டும் மேற்கொண்டிருக்கின்றது. குருந்தூர் மலையில் வெற்றிகரமாக பௌத்த விகாரையை நிறுவியிருக்கும், தொல்பொருள் திணைக்களம் தற்போது, இந்துக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவலிங்க வழிபாட்டு பகுதியையும் இலக்கு வைத்திருக்கின்றது.

இலங்கையில் எதுவும் நடக்கலாம் - எவரும் ஆட்சியில் அமரலாம் - கீழிறங்கலாம் ஆனால் தொல்பொருள் திணைக்களம் மட்டும் அப்படியே, அப்பழுக்கற்ற பௌத்த சேவையை முன்னெடுத்து வருகின்றது. அது எப்படி? தொல்பொருள் திணைக்களம் உண்மையிலேயே அரசாங்க கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றதா அல்லது, பௌத்த மகா சங்கங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா? எவ்வாறு தொல்பொருள் திணைக்களம் அரசாங்க உத்தரவுகளை மீறியும் செயற்பட்டுவருகின்றது?

இலங்கை பஞ்ச ஈஸ்வரங்களால் நிர்வகிக்கப்பட்ட ஒரு நாடென்று, இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்களே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இலங்கைக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடக் கூடாதென்னும் நோக்கில், இலங்கையை காக்கும் காவல் தெய்வங்களாகவே பஞ்ச ஈஸ்வரங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இலங்கையின் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் இந்த ஆலயங்கள் நிறுவப்பட்டிருப்பதை நாம் காணலாம். ஆனால், இப்போது அந்த காவல் தெய்வங்களை பாதுகாக்க தமிழ் இந்துக்கள் பாடுபட வேண்டியிருக்கின்றது. கடவுள் மக்களை பாதுகாப்பார் என்னும் நம்பிக்கை சிதைந்து, கடவுள்களை மக்கள் காப்பாற்ற வேண்டியிருக்கின்றது.

புத்தரின் பலத்திற்கு முன்னால் சிவன் அனைத்து இடங்களிலும் தோற்றுக்கொண்டேயிருக்கின்றார். இலங்கையின் சிவனை காப்பாற்ற சிவசேனையாலும் முடியவில்லை, ஆர்.எஸ்.எஸ் ஆலும் முடியவில்லை. இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு விஜயம் செய்தபோது, பௌத்த பிக்குகளின் காலில் விழுந்து வணங்கியிருந்தார். பௌத்தர்களும் இந்துக்கள்தான் என்னுமடிப்படையில்தான் மோடி, அவ்வாறு செய்திருந்தார். ஆனால் இலங்கைத் தீவின் பௌத்தம், இந்துக்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப் போவதில்லையென்றே சூளுரைக்கின்றது.

அதன் வெளிப்பாடாகவே சிவலிங்க உறைவிடங்களை பௌத்த மயப்படுத்தும் திட்டத்தை வேகப்படுத்தியிருக்கின்றது. இந்துக்களின் குரலை செவிமடுக்க, அவர்களுக்கு அபயமளிக்க எவருமில்லை. சிவசேனை இருக்கின்றது ஆனால், சிவலிங்கம் பந்தாடப்படுகின்றது. வெடுக்குநாறி மலை சிவலிங்கம் சிதைக்கப்பட்டிருப்பதானது, அண்மையில் ஆனையிறவில் நடராஜர் சிலை வைக்கப்பட்டதற்கான எதிரொலியா? அவ்வாறாயின், மோடியின் இந்துத்துவா அணுகுமுறை இலங்கைத் தீவில் தோல்விடைந்து செல்கின்றதா?

இலங்கையில் இந்துத் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்திருப்பதற்கான அடையாளங்கள்தான் சிவலிங்க வழிபாட்டுத் தலங்களாகும். ஆனால் அது தொடர்ந்தும் சிதைக்கப்படுகின்றது. இதற்கு அண்ணாமலையின் பதில் என்ன? ஒரு வகையில் அண்ணாமலை போன்றவர்கள் அண்மைக்காலமாக, வடக்கு மாகாணத்துடன் நெருங்கும் முயற்சிகளை மேற்கொண்டதற்கான எதிர் விளைவுகள்தனா இவ்வாறான செயல்பாடுகள்? ஏனெனில் பி.ஜே.பியின் வடக்குடனான நெருக்கத்தை சிங்கள கடும்போக்குவாதிகள் எதிர்த்திருந்தனர். அவர்கள் இதனை ரசிக்கவில்லை. விமல்வீரவன்ச அண்ணாமலையின் வரவை விமர்சித்திருந்ததையும் நாம் இந்த இடத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழரசு கட்சியின் தலைவர் செல்வநாயகம், தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்றார் - இப்போது அந்தக் கடவுள்களை காப்பாற்றுவதற்கு வழிதெரியாமல், தமிழர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். செல்வநாயகம் அடிப்படையில் ஒரு கிறிஸ்தவர். அவர் ஒரு வேளை அவரது கடவுளை கூறியிருந்தாரோ தெரியவில்லை.

# சகல பிரச்னைக்கும் அரகலயவே காரணம்!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 28
நாட்டில்நிலவும்அனைத்து பொருளாதார மற்றும் சமூகப் பிரச்னைகளுக்கும் அரகலயவே காரணம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பேருவளையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

போராட்டப் பகுதியில் இலவச போதைப்பொருள் பாவனையால் சிறுவர்கள் தற்போது அதற்கு பழகிவிட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். (அ)

# யுத்தத்தினால் பிரிந்த தம்பதியினர் 33 வருடங்களின் பின் ஒன்றிணைவு



கொழும்பு,மார்ச்28
யுத்தம் காரணமாக பிரிந்த திருகோணமலையை சேர்ந்த தம்பதி யினர் 33 வருடங்க ளின் பின்னர் ஒன்று சேர்ந்துள்ளனர்.

யுத்தம் ஆரம்பித்த காலப் பகுதியில் , மனைவி தனது பிள்ளையுடன் கொழும்புப் பகுதிக்கு பாதுகாப்பாக இடம் பெயர்ந்துள்ளார்.

பின்னர் கணவருடனான தொடர்புகள் அற்ற நிலையில் , விகா ரைகள், தேவாலயங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தங்கி வந்துள்ளதுடன் அங்கு வருபவர்களின் உதவிகளுடன் உயிர் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் , வைத்தியசாலை ஊழியர்களினால் அந்தப் பெண்ணின் அடையாளங்களை வெளிப்படுத்தி கணவர், உறவினர்களைத் தேடி கண்டுபிடித்துள்ளனர்.

33 வருடங்களின் பின்னர் தம்பதியினர் ஒன்றிணைந்தது தமது அன்பை வெளிப்படுத்திக் கொண்டமை அங்கிருந்தவர்கள் மத்தியில் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியது. (அ)

# இலவச அரிசி பொதிகள் வழங்கல்



யாழ்ப்பாணம், மார்ச் 28
வறிய மக்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் 2022/2023 பெரும்போக நெல் கொள்வனவு நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 282 நபர்களுக்கு 12 லட்சத்து 32 ஆயிரத்து 820 கிலோ அரிசி வழங்கப்பட உள்ள நிலையில், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 10 ஆயிரத்து 476 நபர்களுக்கு ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 760 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி, உதவி பிரதேச செயலாளர், உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு அரிசியை வழங்கினர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 28 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 14
நல்ல நேரம் : 07.00 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சப்தமி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். தோற்றப் பொலிவு கூடும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த இடத்தில் தொட்டாலும் பல முறை முயன்று முடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். வியாபாரத்தில் வேலையாட்களால் அதிருப்தி அடைவார்கள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். சொந்த பந்தங்களின் வருகையால் வீடு களை கட்டும்.

**சிம்மம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நண்பர்களால் அனுகூலம் உண்டு. வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**கன்னி**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி இருக்கும்.

**விருட்சிகம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். தாயார் ஆதரித்து பேசுவார்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். புது பொருள் வந்து சேரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**கும்பம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். புது வேலை கிடைக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும். நட்பு வட்டம் விரியும்.

**மீனம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். அந்தஸ்து உயரும்.

# காங்கிரஸினர் இன்றிரவு உள்ளிருப்பு போராட்டம்!

## தமிழ்நாடு சட்டசபையில்

சென்னை, மார்ச் 28

ராகுல் காந்திக்கு சிறை தண்டனை மற்றும் எம். பி. பதவி பறிப்பு ஆகியவற்றை கண்டித்து இன்று இரவு முழுவதும் தமிழ்நாடு சட்டசபையில் உள்ளிருப்பு போராட்டத்தை காங்கிரஸ் கட்சியினர் நடத்தவுள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி, நீரவ் மோடி, லலித் மோடியை குறிப்பிட்டு "அனைத்து திருடர்களின் பெயரும் மோடி என்று முடிகிறது ஏன்? என்று கேள்வி எழுப்பினார்.

மோடியின் பெயர் குறித்து அவதூறு ஏற்படுத்தும் என்ற வகையில் பேசினார் என்று கூறி பா. ஜ. க. தொடர்ந்த வழக்கில் ராகுல் காந்திக்கு இரு ஆண்டு சிறைத்தண்டனை நீதிமன்றால் விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

இவற்றுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி இந்தியா முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில், தமிழகத்திலும் இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில், இன்று இரவு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் சட்டமன்றத்தில் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தவுள்ளனர். அத்துடன், இன்றைய தினம் கறுப்பு உடைகளை அணிந்தும் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# அறிவியல் மூலம் நிரூபிக்கக்கூடிய மொழி, இனம் தமிழும் தமிழினமுமே!

## கல்வித்துறை அமைச்சர்



சென்னை, மார்ச் 28

அறிவியல் மூலம் நிரூபிக்கக் கூடிய ஒரே மொழி, ஒரே இனம் தமிழும், தமிழினமும் தான் என தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடந்த இலக்கியத் திருவிழா விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அறிவு சார்ந்த, இலக்கியம் சார்ந்த நூல்களை படிக்கும்போதுதான் நாம் யார் என நமக்குத் தெரியும். முதலில் மதுரை, இங்கிருந்து தானா எனவும், மதுரை வேறொரு இடத்தில் இருந்ததாகவும் சொல்கிறார்கள். திருவிளையாடல் புராணம் பழைய மதுரை இது இல்லை என்கிறது. முதலாம் தமிழ்ச் சங்கத்தை கடல் அடித்துச் சென்றதாக சொல்லப்படுகிறது. கண்ணகி எரித்த மதுரையைப் பற்றி சிலப்பதிகாரம் சொல்கிறது. இப்படி ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு விதத்திலும் மதுரையைப் பற்றி ஒரு கருத்து இருந்து வருகின்றது. ஆனால் இரண்டு மட்டும் நிலையாக இருந்து வருகிறது. அதில், மதுரை என்ற பெயரும், மதுரை மக்களின் அன்பும் மட்டும் என்றும் மாறாமல் இருந்து வருகிறது.

கீழடியில் கிடைத்த தொல்லியல் எச்சங்கள் மூலம் சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் நகர, நாகரிகத்தோடு வாழ்ந்ததற்கான அறிவியல் சான்றுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. அறிவியல் மூலம் நிரூபிக்கப்படக்கூடிய ஒரே மொழி, ஒரே இனம் தமிழும், தமிழினமும்தான். பொருநை என்பது 3,500 ஆண்டுகள் என்று சொல்கின்றனர். இத்தகைய பெருமைகளை இலக்கியவாதிகளும், இலக்கியங்களும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் - என்றார்.

# புதுச்சேரியில் குண்டுவீசி பா. ஜ. க. பிரமுகர் கொலை!

பாண்டிச்சேரி, மார்ச் 28

புதுச்சேரி வில்லியனூரில் வெடிகுண்டு வீசி பா. ஜ. க. பிரமுகர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பா. ஜ. க. பிரமுகரான செந்தில் என்பவர் வெதுப்பகத்தில் நின்றபோது 6 பேர் கொண்ட மர்ம கும்பல் திடீரென அவர் மீது வெடிகுண்டு வீசியும், கத்தியால் தாக்கியும் கொலை செய்துவிட்டு தப்பி ஓடியுள்ள னர்.

இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்த பொலிஸார், தப்பி சென்ற மர்ம நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சகலரும் இணைந்தால் வெற்றி!

## முன்னாள் முதலமைச்சர்



சென்னை, மார்ச் 28

அனைவரும் ஒன்றிணைந்தால் வெற்றி நிச்சயம் என முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

அனைவரையும் ஒருங்கிணைத்து கழகத்தை மாபெரும் வெற்றி அடைய செய்வேன் என்று சசிகலா கூறியமை தொடர்பில் அவரிடம் கேட்ட போது,

இதைத்தான் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அனைவரும் ஒன்றிணைந்தால் வெற்றி நிச்சயம்.

சாதாரண தொண்டர்கள் கூட கழகத்தின் பதவிக்கு போட்டியிடலாம். ஆனால், அவர்கள் கழக விதியை மாற்றி 10 மாவட்ட செயலாளர் முன்மொழிந்து 10 மாவட்ட செயலாளர் வழிமொழிந்தால் மட்டுமே உச்சபட்ச பதவிக்கு போட்டியிடலாம் என்று விதிகளை மாற்றி அமைத்திருக்கிறார்கள். இதைத்தன் கூடாது என்கிறோம்.

அடிமட்ட தொண்டர்கள் ஆதரவுடன் 50 ஆண்டுகாலம் முழுமையாக தமிழகத்தை வழிநடத்தி ஆட்சி புரிந்த கட்சி அ. தி. மு. க. என்ற நிலையை அம்மாவும், புரட்சித்தலைவரும் உருவாக்கினார்கள். அதைத் தான் நாங்கள் வலியுறுத்துகிறோம் - என்றார்.

# சீனாவுடன் கொடுக்கல் வாங்கல்கள் அமெரிக்காவுடன் மந்திராலோசனை

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 28

**அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் சீனாவுடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தக் கூடும் என்ற அச்சத்தை அவர் நிராகரித்துள்ளார்.

சீனர்களுக்கு துறைமுகம் சொந்தமில்லை. துறைமுகம் இலங்கையிடமே உள்ளது. ஆனால் துறைமுகத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் சீன வணிகர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக அதிகார சபையால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டதுடன் பெரும் நஷ்டத்தைச் சந்தித்து வருவதே இதற்கான காரணமாகும்.

சீனாவை தவிர, துறைமுகத்தை கையேற்க யாரும் இல்லை. எனவே அதை மூடுவதே தமது மற்றுமொரு தெரிவாக இருந்தது என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்த நிலையில் துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப் படும் நோக்கில், இலங்கை கடற்படையின் தெற்குக் கட்டளைப் பிரிவு அம்பாந்தோட்டையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல அமெரிக்க மற்றும் ஜப்பானிய போர்க் கப்பல்கள் துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன.

துறைமுகத்திற்கு அடிப்படை இராணுவ மதிப்பு இல்லை. சீனர்கள் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்த மாட்டார்கள். அவர்களால் முடியாது. துறைமுகம் மற்றும் சீனர்களுடனான பரிவர்த்தனைகள் தொடர்பாக அமெரிக்காவுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான ரிட் மனு நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 28

காலிமுகத்திடலில் "கோட்டா கோ கம" போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவித்து மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து வாக்கு மூலம் பதிவு செய்ய சட்டமா அதிபருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# உணவுப் பொதியின் விலையை குறைக்குக!

கொழும்பு, மார்ச் 28

மரக்கறிகள் மற்றும் மீன்களின் விலைகள் தற்போது குறைந்துள்ள நிலையில் உணவுப்பொதியின் விலையை குறைக்கப்படவேண்டும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஒரு கிலோ ஆயிரத்து 300 ரூபாய்க்கும் அதிக விலைகளில் விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை, தற்போது 600 ரூபாயாக விற்பனை செய்யப்படுகின்றன.

பருப்பு, கிழங்கு என்பற்றின் விலைகளும் மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்நிலையில் உணவுப் பொதியின் விலைகளை குறைக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 2030 இல் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70 வீத மின்சார உற்பத்தியே இலக்கு

## கூறுகின்றார் ஷெஹான் சேமசிங்க



கொழும்பு, மார்ச் 28

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70 வீத மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இலக்கு என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட காலநிலை சுபீட்ச திட்டம் நாட்டின் காலநிலை ஸ்திரமின்மைக்கு மத்தியிலும் தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவில் பேசும்போதே அவர் இதனைக் கூறினார். (அ)

# சதொச ஊழியர்களுக்கு 7 கோடி ரூபா போனஸ்!

கொழும்பு, மார்ச் 28

சுற்றறிக்கைகளுக்கு மாறாக லங்கா சதொச லிமிடெட் ஊழியர்களுக்கு 2019 ஆம் ஆண்டு 7 கோடியே 46 இலட்சம் ரூபா விற்கும் அதிகமாக போனஸ் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு நிறுவன ஊழியர்களுக்கு போனஸாக வழங்கப்படவேண்டிய தொகை 3,000 ரூபாவாக இருந்த போதிலும், திறைசேரியின் அங்கீகாரம் இன்றி தலா 25,000 ரூபா செலுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜூன் 2, 2003 திகதியிட்ட பொது வணிகச் சுற்றறிக்கை எண். 12 இன் 6.5 இன் படி, போனஸ் செலுத்தும் திகதியில் ஆண்டு நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இந்த போனஸ் சுற்றறிக்கைகளுக்கு மாறாக வழங்கப்பட்டுள்ளது அத்தோடு, இது குறித்த அறிக்கைகள் ஒரு வருடம் மற்றும் 6 மாதங்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோயில்களில் தங்க நகைகள் திருடிய இந்திய தம்பதி உள்ளிட்ட 9 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 28

பூண்டுலோயா அருள்மிகு முத்து மாரியம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கும்பாபிஷேக திருவிழாவில் அடியவர்களிடம் நகைகளைக் கொள்ளையிட்ட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

7 பெண்களும், 2 ஆண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்ற திருவிழாவில் இந்தக்குழுவினர் 4 பெண்களின் கழுத்தில் அணிந்திருந்த தங்கநகைகளை கொள்ளையடித்துள்ளனர்.

3 பெண்களிடம் கொள்ளையடித்திருந்தனர். அந்த பெண்களிற்கு நகை கொள்ளையிடப் பட்டதே தெரிந்திருக்கவில்லை. அவர்கள் நான்காவது பெண்ணின் சங்கிலியை அறுக்க முயன்றபோது, அவர் அலறினார். அதையடுத்து பொலிஸார் துரிதமாக செயற்பட்டு ஒரு கும்பலைப் பிடித்தனர்.

சந்தேகநபர்கள் கைதாகிய பின்னரே, 3 பெண்களும் தமது கழுத்தில் அணிந்திருந்த நகைகள் திருடப்பட்டதை அறிந்திருந்தனர். மூவரிடமிருந்தும் ரூ.1.6 மில்லியன், ரூ. 800,000 மற்றும் ரூ.500,000 பெறுமதியாக தங்கநகைகள் திருடப்பட்டன.

ஆரம்பத்தில் இரண்டு சந்தேகநபர்கள் மாத்திரம் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், ஏனைய சந்தேக நபர்கள் கோவிலுக்குள் நடந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் இந்திய தம்பதி மற்றும் 6 பெண்களும், ஒரு ஆணும் உள்ளடங்குகிறார்கள். இந்திய தம்பதியைத் தவிர மற்ற சந்தேக நபர்கள் கிளிநொச்சி, சின்னக்குளம், புத்தளம் மற்றும் திகன ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 27 முதல் 53 வயதுக்கு உட்பட்டவர்கள்.

சந்தேகநபர்கள் ஒன்பது பேரும் நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மார்ச் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ரூ.1000 போலி நாணயத்தாள்களுடன் முன்னாள் பொலிஸ் அலுவலர் கைது!

கொழும்பு, மார்ச் 28

மாவனெல்லை பிரதேசத்தில் உள்ள மதுபான விற் பனை நிலையமொன்றில் 1000 ரூபா போலி நாணயத் தாளை கொடுத்து மது போத்தல் ஒன்றை பெற்றுக் கொள்ள முற்பட்ட முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கைது செய் துள்ளதாக மாவனல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் 2011 ஆம் ஆண்டு கிராதுருகோட்டே பொலிஸ் நிலையத்தில் பணி புரியும்போது பெண் ஒருவரை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் குற்றம் சாட் டப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் என பொலிஸார் கூறினர்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் 1000 ரூபா போலி நாணயத்தாள் கொடுத்து மது போத்தலை பெற முற்பட்டபோது மது பானச்சாலை ஊழியர்கள் சந்தேக நபரை தடுத்து வைத்து மாவனல்லை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவரிடம் இருந்து மேலும் ஒரு 1000 ரூபா போலி நாணயத்தாள் கண்டு பிடிக்கப்பட் டது. (அ)

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேற்று முதல் இலவசமாக அரிசி விநியோகம்

கொழும்பு, மார்ச் 28

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசியை வழங்கும் வேலைத் திட்டம் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பெரும்போகச் செய்கையின் போது அரசாங்கமானது விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட நெல்லை, அரிசியாக்கி குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டது. குறைந்த வருமானம் பெரும் 29 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசியை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக மாதமொன் றுக்கு ஒரு குடும்பத்துக்கு 10 கிலோகிராம் அரிசி என்ற முறையில் இரண்டு மாதங்களுக்கு தேவையான அரிசியை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 20 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தாலும், இந்த எண்ணிக்கையானது தற்போது 29 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறினார். (அ-கே)

# பேரினவாத நடவடிக்கைகளை ரணில் உடன் நிறுத்தவேண்டும்!

## மனோ கணேசன் வலியுறுத்து

**கொழும்பு, மார்ச்,28**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேரினவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயச் சிலைகள் உடைக்கப்பட்டு, வீசப்பட்டுள்ள நிலையில் அதற்கு கண்டனம் தெரிவித்து ருவிட்டரில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தொல்பொருள் திணைக்களம், தொல்பொருளை பாதுகாப்பது எனக் கூறிக்கொண்டு இந்துக்கள் இக்கோவிலுக்கு போவதை தடுக்க வேண்டும் என்று செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இராணுவ பாதுகாப்பு வலயத்தில் இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டியவை என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# மேலதிக நேரக் கொடுப்பனவு; விசேட சுற்றறிக்கை விரைவில்

கொழும்பு, மார்ச் 28

அரச பணியாளர்களின் மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பிலான விசேட சுற்றறிக்கை எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படவுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அரச பணியாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த முன்னதாக தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இது எதிர்காலத்தில் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் இருந்து வேறுபட்டதாக இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான அரச சேவையாளர்களின் வேதனம், ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியின் ஒரு தொகையை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது தெரிவித்தார். (அ)



# கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் 30 ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடம் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழ்த்தாய்க்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழை வளர்க்க அருந்தொண்டாற்றிய திருவள்ளுவர், ஔவையார் உள்ளிட்டோருக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழும் பரிசில்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் எஸ். பார்த்தீபன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், மேனாள் பள்ளி முதல்வர் எஸ். பாலகிருஸ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சி தேர்தலுக்காக இதுவரை ரூ. 40 மில்லியன் மட்டுமே கிடைத்தது!

கொழும்பு, மார்ச் 28

தேர்தலுடன் தொடர்புடையதாக 200 மில்லியன் ரூபா பெறுமதியான பணிகள் நிறைவுறுத்தப்பட்டுள்ள போதிலும், இதுவரை 40 மில்லியன் ரூபா நிதி மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச அச்சகமா அதிபர் கங்காணி லியனகே தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குசீட்டு அச்சிடுதல் உள்ளிட்ட சகல நடவடிக்கைகளுக்கும் அரச அச்சக திணைக்களத்திற்கு 533 மில்லியன் ரூபா தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குறித்த தேர்தலுக்கான ஒரு கோடியே 87 இலட்ச வாக்குசீட்டுக்களில் இதுவரை 3 இலட்சம் வாக்குசீட்டுக்களே அச்சிடப்பட்டுள்ளன.

அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக நிதியை பெற்றுக் கொள்ளும் நோக்கில், திறைசேரியின் செயலாளருக்கு அரச அச்சக அதிபரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், நிதியமைச்சருக்கு அறியப்படுத்தியுள்ளதாக திறைசேரியின் செயலாளர் தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படும்?

கொழும்பு, மார்ச் 28

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, கடந்த ஜனவரி 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில், மார்ச் 09 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலுக்கு நிதியளிக்க முடியாது என்று அரசாங்கம் வலியுறுத்தியதால், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், இறுதியில் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.

இருப்பினும், திட்டமிடப்பட்ட திகதிக்கு ஒரு மாதத்துக்கும் குறைவான காலமே இருப்பதால், இந்த முறையும் வாக்குப்பதிவு தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணப்பற்றாக்குறை காரணமாக வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், தேர்தல் ஒத்திவைக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தேர்தல் ஒத்திவைக்கப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு முன்னர் குறிப்பிட்டிருந்தது. (அ)

# நாணய நிதிய கடனில் இருந்து அரச ஊழியர்களுக்கு சம்பளம்

கொழும்பு, மார்ச் 28

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான அரச சேவையாளர்களின் வேதனம், ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியின் ஒரு தொகையை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற பஸ்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

குறித்த கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அரசாங்க வருமானம் போதுமானதாக இல்லை என அவர் கூறினார்.

அரச சேவையாளர்களது வேதனம், ஓய்வூதியக் கொடுப்பனவும் சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகளுக்காக 196 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசின் இந்த மாதத்தின் மொத்த வருமானமாக 173 பில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் செலவினங்களுக்கு மேலதிகமாக 23 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

புத்தாண்டு காலம் என்பதால் இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவுகளையும்



வழங்கவுள்ளதால், அதிகளவான நிதி தேவைப்படுகின்றது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகையினை பெற்றுக்கொள்ள திறைசேரியிடம் கோரியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# நட்டஈட்டை வழங்க உதவி செய்யுங்கள்!

## மக்களிடம் கேட்கிறார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 28

ஈஸ்டர் தாக்குதல் வழக்கின் தீர்ப்பு தொடர்பான நட்டஈட்டை வழங்குவதற்காக, தன்னால் முடிந்தவரை தனது நண்பர்களிடம் பணம் வசூலித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, இந்த நட்டஈட்டை வழங்க இன்னும் மூன்று மாதங்களே உள்ளன.

குறிப்பிட்ட காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்படாவிட்டால், என்னைச் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிடலாம் என்பதனால் எனக்கு உதவி செய்யுங்கள்- என்றார்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதன்பிரகாரம் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவேண்டும் என மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

# ஏகாதிபத்திய மனோநிலையுடன் செயற்பட்ட கோட்டாவின் செயலர்

## அமைச்சர் பந்துல குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 28

**கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பொருளாதார ஆலோசனை வழங்குவதற்கு எவராலும் முடியாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் அவரது செயலாளர் ஏகாதிபத்திய மனோநிலையுடன் செயற்பட்டார்.**

அவரது நிலைப்பாட்டைத் தவிர வேறு எவரது நிலைப்பாடும் ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த பொருளாதாரத் தீர்மானமே இந்நாட்டின் மோசமான நிலைமைக்குக் காரணம்.

கோட்டாபயவின் ஆட்சியில் வரிக் குறைப்புகள் எவையும் அமைச்சரவை அனுமதியுடன் இடம்பெற்றவை அல்ல. நாங்கள் ஊடகங்கள் ஊடாகவே இவ்வாறு நடந்திருப்பதை அறிந்தோம்.

ஜனாதிபதியின் செயலாளர் எடுத்த தனிப்பட்ட முடிவின்படியே எல்லாம் நடந்தது.

49 ரூபாவாக இருந்த சீனி வரி நள்ளிரவில் 25 சதமாகக் குறைக்கப்பட்டது. அப்போது நான் வர்த்தக அமைச்சர். அப்போது நான் இருந்தது அபயராம விகாரையில் சீனி, பருப்பு உள்ளிட்ட பொருட்களின் வரி இன்று நள்ளிரவு குறைக்கப்படும் என்று செய்தி வெளியானது. எனக்கு எதுவுமே தெரியாது.

ஏற்கனவே 49 ரூபா வரியில் இறக்குமதி செய்யப்பட சீனி தொகை களஞ்சியசாலையில் உள்ளது. இதனால் இறக்குமதி செய்த வர்த்தகர்களுக்கு 48.75 ரூபா நட்டம். அந்த வர்த்தகர்கள் காலையில் எனது அமைச்சுக்கு வந்தனர்.

நான் அமைச்சில் இதற்கு எதிராக முடியுமானவரை வாதாடினேன். எதுவும் நடக்கவில்லை - என்றார். (அ)



# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 28

கொலன்னாவையில் அமைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்கஉறுப்பினர்கள் அனைவரும் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் பெற்றோலிய கூட்டுத்தாபன நுழைவாயில் அருகில் இடம்பெற்றது. (அ)

# பாராளுமன்றத்துக்கு அருகாமையில் ஜனாதிபதி மாளிகை அமைக்க திட்டம்

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன வேறும் ஓர் இடத்தில் நிர்மாணிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

சுமார் 30 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தனப் பூங்கா என்னும் இடத்தில் ஜனாதிபதி மாளிகையும், செயலகமும் நிர்மாணிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் கீழ் கோட்டேயில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை வேறு ஓர் அபிவிருத்தி திட்டத்திற்காக பயன்படுத்தப்பட உள்ளது.

எனவே ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பனவற்றை பாராளுமன்ற வளாகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சந்தனப் பூங்கா பகுதியில் நிர்மாணிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரட்ன இந்த பரிந்துரையை செய்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகை நிர்மாணம் குறித்த திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒன்பது ஏக்கர் பரப்பிலான இந்தக் காணியில் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பனவற்றை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தக் காணிகளுக்கு அருகாமையிலேயே பிரதமர் அலுவலகம் மற்றும் பிரதமர் மாளிகை என்பனவற்றை நிர்மாணிக்க முடியுமா என ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில் புதிதாக ஜனாதிபதி மாளிகை நிர்மாணம் பற்றிய பேச்சுக்கள் கடும் விமர்சனங்களை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# தந்தை செல்வாவின் ஜனன தின நிகழ்வு 31 இல் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தின நிகழ்வு 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையக மக்களின் மனித உரிமைகள் எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவை சமூக அபிவிருத்திக்கான நிறுவன நிர்வாக இயக்குநர் பெரியசாமி முத்துலிங்கம் மேற்கொள்ளவுள்ளார்.

தந்தை செல்வா நினைவுப் பேருரையை 13ஆம் திருத்தச் சட்டம் மீதான ஒரு பிரதிபலிப்பு எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் ஆற்றவுள்ளார்.

பேராசிரியர்.சி.பத்மநாதன் எழுதிய 'தந்தை செல்வாவின் அரசியல் ஞானமும் சாதனைகளும்' என்ற நூலும் கவிஞர் எ.எம்.எம்.அனஸ் எழுதிய 'தந்தை செல்வா சீர்மை காவியம்' எனும் கவிதை நூலும் இதன்போது வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (அ)

# போராட்டம் நடத்திய ஊழியர்களுக்கு அரசினால் ஒரு நாள் ஊதியக் குறைப்பு



கொழும்பு, மார்ச் 28

பணிக்கு வராத மற்றும் கடந்த புதன் கிழமை தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு நாள் ஊதியக் குறைப்பை விதிக்க தொழில் அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்த விடயத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும் எதிராக தேவையான சட்ட நடவடிக்கையும் அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

எதிர்காலத்தில், அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை சீர்குலைக்கச் சில பிரிவுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தந்த தொழிலில் உள்ள சில பிரச்சினைகள் தொடர்பான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வது வேறு விடயம். எனினும், இவை அரசியல் உள்நோக்கம் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளாகும்.

தொழிலாளர் அமைச்சர் என்ற முறையில் உண்மையான தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எனது ஆதரவை வழங்குவேன்.

எனினும் அரசியல் உள்நோக்கம் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் அரசுத் துறை வேலைகளில் சேர அனுமதிக்கப்படமாட்டார்கள் - என்றார். (அ)

# உலக நாடுகள் மத்தியில் இப்போது இலங்கை மீதான நம்பிக்கை உறுதி!

## கூறுகின்றார் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



கொழும்பு, மார்ச் 28

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கைக்கான கடனை வழங்குவது ஏனைய நாடுகள் மத்தியில் இலங்கை தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவான்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதால், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியுடன் வெளிநாட்டு கடனை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு பின்னர் இலங்கைக்கு முதலாம் கட்ட நிதி கிடைக்கப்பெற்றிருந்தது.

இதன்பின்னர், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன 7 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கைக்கு விரைவில் வழங்கவுள்ளன.

இது இலங்கை மீது ஏனைய நாடுகளுக்கு மீள நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (அ)

# 19 வீத மரக்கறிகளும் 21 வீத பழங்களும் போக்குவரத்தின்போது வீணாகின்றன!

கொழும்பு, மார்ச் 28

முறையான போக்குவரத்து இன்மையால், நாட்டின் வருடாந்த மரக்கறி உற்பத்தியில் 19 சதவீதமும் பழ உற்பத்தியில் 21 சதவீதமும் அழிவடைவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

போக்குவரத்தின்போது 221, 955 மெற்றிக் தொன் மரக்கறிகளும் 290,151 மெற்றிக் தொன் பழங்களும் அழிவடைகின்றன.

இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான மரக்கறிகள் மற்றும் பழங்களின் சேதம் மிக அதிக அளவில் காணப்படுகின்றது.

அறுவடைக்குப் பின்னரான சேதத்தினால் நாடு கிட்டத்தட்ட 40 சதவீதமான அறுவடையை இழக்கின்றது.

மேலும், நகர்ப்புறங்களில் வீணாகும் உணவின் அளவு மிக அதிகமாக உள்ளது - என்றார்.



# “காந்தி சட்டம் பயிலவில்லை”

# ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா சொல்வது உண்மையா?

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, “மகாத்மா காந்தி எந்தப் பல்கலைக்கழக பட்டமும் பெறவில்லை, சட்டக்கல்வி பட்டம் பெற்றவர் இல்லை” என்றும் “உயர்நிலைப் பள்ளி டிப்ளமோ மட் டுமே முடித்துள்ளார்” என்றும் கடந்த வாரம் வியாழக்கிழமையன்று தெரிவித்தார்.

மேலும், காந்தி சட்டப்படிப்பு பயின்றவர் என்ற தவறான எண்ணம் படித்தவர்களிடம்கூட இருப்பதாகவும் ஆனால் காந்திஜியிடம் எந்தப் பட்டமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

குவாலியரில் உள்ள ஐடிஎம் பல்கலைக்கழகத்தில் டாக்டர் ராம் மனோகர் லோஹியா குறித்த புத்தகத்தை வெளியிட்டுப் பேசியபோது ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா மகாத்மா காந்தி குறித்துப் பேசினார்.

அப்போது அவர், “காந்தி பல பெரிய விஷயங்களைச் செய்துள்ளார். அவை அனைத்தையும் சாதித்த அவரது வாழ்வின் மையமாக இருந்தது சத்தியம் மட்டுமே. வாழ்நாள் முழுவதும் அவர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டிருந்தார். அவர் சத்தியத்திற்கு அடிபணிந்தார். அவருடைய வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் பார்த்தால் சத்தியம் மட்டுமே வேறு எதுவுமே இல்லை.

எவ்வளவு சவால்கள், சோதனைகள் வந்தபோதிலும் அவர் சத்தியத்தை ஒரு போதும் கைவிடவில்லை. அதன் விளைவாக அவர் தேசத்தின் தந்தை ஆனார்,” எனக் கூறிய மனோஜ் சின்ஹா மகாத்மா காந்தியின் கல்வித் தகுதி குறித்துக் கேள்வி எழுப்பினார்.

**காந்தி குறித்து துணை நிலை ஆளுநர் என்ன பேசினார்?**

“இன்னொரு விஷயத்தையும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காந்திஜி சட்டக்கல்வியில் பட்டம் பெற்றவர் என்றும் நாட்டில் படித்தவர்கள் உட்படப் பலருக்கும் தவறான எண்ணம் இருக்கிறது.

ஆனால் காந்திஜி எந்தப் பட்டமும் பெறவில்லை. நான் சொல்வதற்குச் சிலர் பதிலடி கொடுப்பார்கள். ஆனால், ஆதாரங்களுடன் பேசுகிறேன்.

காந்திஜி படிக்கவில்லை என்று சொல்ல யாருக்கும் தைரியம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால் நான் சொல்கிறேன், அவர் பல்கலைக் கழகப் பட்டம் ஒன்று கூடப் பெறவில்லை தெரி யுமா?” என்று கூறினார்.



மேற்கொண்டு பேசியவர், “அவர் சட் டக்கல்வியில் பட்டம் பெற்றவர் என்றும் நம்மில் பலரும் நினைக்கிறார்கள். ஆனால், அவர் அவ்வாறு பெற வில்லை. உயர்நிலைப் பள்ளி டிப் ளோமோ மட்டுமே அவருடைய கல்வித் தகுதி,” என்றார்.

மேலும், “அவர் சட்டக்கல்விக்குத் தகுதியானவர். ஆனால், அவர் அதில் பட்டம் பெறவில்லை. இருந்தாலும் அவர் தேசத்தின் தந்தை ஆனார். அதற்கு எவ்வளவு படித்தார் என்பதைப் பாருங்கள்.

ஆகையால் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பட்டம் பெறுவதை மட்டுமே கல்வியாகக் கருதும் சம்பிரதாயத்தைக் கடைப் பிடிக்காதீர்கள்,” என்று பேசினார்.

மனோஜ் சின்ஹா தனது உரையில் காந்தியின் பட்டங்களைப் பற்றி ஆதாரங்களுடன் பேசுகிறேன் என்று கூறினார். ஆனால், அவரது கூற்றுகளை உறுதி செய்வதற்குரிய எந்த ஆதாரத்தையும் அவர் வழங்கவில்லை.

ஆனால், மகாத்மா காந்தியின் கல்வி தொடர்பான ஆவணங்கள், மனோஜ் சின்ஹாவின் கூற்றுகளுக்கு நேர்மாறான உண்மைகளை முன்வைக்கின்றன.

தேசிய காந்தி அருங்காட்சியகத்தில் இருந்து பிபிசி ஹிந்திக்கு கிடைத்த ஆவணங்களின்படி, காந்தி லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்ட சட்டக் கல்லூரியான இன்னர் டெம்பலில் சட்டக்கல்வியில் பட்டம் பெற்றார்.

காந்திக்கு 1891இல் சட்டத்தரணியாக (Bar-at-Law) சான்றிதழ் வழங்கப்பட்டது.


இந்தச் சான்றிதழ் போக, மகாத்மா காந்தி கையெழுத்திட்ட ஆவணமும் பார் கவுன்சில் முன்பாகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இன்னர் டெம்பலில் அவர் அனுமதிக் கப்பட்டதற்கான ஆவணம் உள்ளது.




அந்த ஆவணத்தின் எண் 7910. அதில் இன்னர் டெம்பல் சட்டக்கல்லூரியில் அவரது சேர்க்கைக்கான அறிவிப்பு, சேர்க்கைக்கான செலவு, பதிவுக் கட்டணம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

லண்டனில் சட்டம் படித்த பிறகு, காந்தி இந்தியாவுக்குத் திரும்பினார். பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆனால், வக்கீல் தொழில் அங்கு அவருக்குச் சரியாக நடக்கவில்லை.







**ஆவணங்கள் என்ன சொல்கின்றன?**

தேசிய காந்தி அருங்காட்சியகத்தில் இருந்து பிபிசி பெற்ற ஆவணங்களில், 2020ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்றத்தில் ‘காந்தி ஆஸ் எ லாயர்’ என்ற தலைப்பில் நடைபெற்ற கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட பம்பாய் உயர்நீதிமன்றத்தில் சேர்வதற்கான காந்தியின் விண்ணப்பத்துடைய நகலும் அடக்கம்.

இந்த விண்ணப்பம் 1891இல் கொடுக் கப்பட்டது. மகாத்மா காந்தியின் கையெழுத்து அந்த ஆவணத்தில் உள்ளது.

ஆனால், மகாத்மா காந்தியால் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் தனது வழக்கறிஞர் பணியைத் தொடர முடியாமல் போகவே, ராஜ்கோட் சென்று கத்தியவார் அரசியல் நிறுவனத்தில் பணியாற்றினார்.

ராஜ்கோட் அரசியல் அமைப்பின் அரசிதழில், அங்குள்ள நீதிமன்றங்களில் பணியாற்றுவதற்கான மகாத்மா காந்தியின் விண்ணப்பம் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1891ஆம் ஆண்டின் அந்த ஏஜென்சியுடைய அறிவிப்பு எண் 16, சட்டத்தரணி எம்.கே.காந்தி கத்தியவார் அரசியல் ஏஜென்சியின் நீதிமன்றங்களில் பணியாற்ற அனுமதி கோரினார் என்பதைக் காட்டுகிறது.

இருப்பினும் கத்தியவாரில்கூட அவர் சட்டப் பணியில் சிறப்பான வெற்றியைப் பெறவில்லை.

1893இல் கத்தியவாரை சேர்ந்த தாதா அப்துல்லா என்ற இஸ்லாமிய வணிகர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை அணுகினார்.

தாதா அப்துல்லா தென்னாப்பிரிக்காவில் வெற்றிகரமான கப்பல் வணிகத்தை நடத்தி வந்தார். அங்கு தனது வணிகம் சார்ந்த வழக்குகளில் பணியாற்ற காந்தி அங்கு வர வேண்டும் என்று தாதா அப்துல்லா விரும்பினார்.

தாதா அப்துல்லாவின் தூரத்து உறவுக்கார சகோதரருக்கும் ஒரு வழக்கறிஞர் தேவைப்பட்டார். அதுவும் கத்தியவாரை சேர்ந்த வழக்கறிஞராக இருந்தால் நல்லது என்றும் கருதினார்.

தாதா அப்துல்லாவுடைய அழைப்பை ஏற்று காந்தி தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு அவருடைய வழக்குகளில் வாதாட நடால் நகரில் ஓராண்டு தங்க வேண்டியிருந்தது. அப்போது தென்னாப்பிரிக்காவும் ஆங்கிலேயர்களின் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்தது.

ஏப்ரல் 1893இல், தனது 23 வயதில் காந்தி தென்னாபிரிக்காவிற்கு சென்று அப்துல்லாவின் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினார்.

**மகாத்மா காந்தியின் கொள்ளுப் பேரன் என்ன சொல்கிறார்?**

காந்தியின் பட்டங்கள் குறித்து மனோஜ் சின்ஹா கூறியதற்கு மகாத்மா காந்தியின் கொள்ளுப் பேரன் துஷார் காந்தியும் பதிலளித்துள்ளார்.

அவர் மனோஜ் சின்ஹாவின் கூற்றை மறுத்து அடுத்தடுத்து ட்வீட் செய்தார்.

ஒரு ட்வீட்டில், “எம்.கே.காந்தி இரண்டு முறை மெட்ரிகுலேஷன் படித்தார். முதல்முறை ராஜ்கோட் ஆல்பிரட் உயர்நிலைப் பள்ளியில் படித்தார், இரண்டாவதாக அதற்கு இணையாக லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மெட்ரிகுலேஷனில் படித்தார். பிறகு லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிய சட்டக்கல்லூரியான இன்னர் டெம்பலில் சட்டம் பயின்று, பட்டம் பெற்றார்,” என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், “காந்திஜி லத்தீன் மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு டிப்ளமோக்கள் பெற்றார்,” என்று கூறினார்.

மற்றொரு ட்வீட்டில், “இதுகுறித்த அறிவை துணை நிலை ஆளுநர் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் பாபுவின் சுயசரிதையை ஜம்முவிலுள்ள ராஜ் பவனுக்கு அனுப்பியுள்ளேன்,” என்றும் கூறினார். (பிபிசி)

# சிலை அரசியல் அறிவும் செயலும்

நிலாந்தன்

வடக்கில் கடந்த ஒரு கிழமைக்குள் மட்டும் மூன்றுக்கு மேற்பட்ட சிலைகள் திறக்கப்பட்டுள்ளன. நடராஜர் சிலை, வள்ளுவர் சிலை, சங்கிலியன் சிலை, என்பவற்றோடு திருநெல்வேலி சந்தையில் மணிக்கூட்டுத் தூபி ஒன்று.

இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியலை கடந்த வாரக்கட்டுரையில் ஓரளவுக்குப் பார்த்தோம். இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் மத அரசியலைத் தனியாயகப் பார்க்கவேண்டும். இன்று இக்கட்டுரையானது இச்சிலைகளின் அழகியல் அம்சங்களைக் குறித்த விவாதக் குறிப்புகள் சிலவற்றை முன்வைக்கின்றது.

பொதுவெளிச் சிற்பங்கள் அவற்றை நிறுவும் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விருப்பங்களை மட்டும் பிரதிபலிப்பவை அல்ல. அதைவிட ஆழமான பொருளில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை, அழகியல் உச்சங்களை, அரசியல் கலாச்சார பல்வகைமையை வெளிக்காட்டுபவைகளாக அமைய வேண்டும். ஒரு வெளிப்பார்வையாளர் கண்டு வியக்கும் அளவுக்கு அது ஒரு வெற்றிபெற்ற கலைப் படைப்பாக அமைய வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில பொதுச் வெளிச் சிற்பங்களை அல்லது சிலைகளை அல்லது தூபிகளைப் பார்க்கலாம்.

முதலில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் சிலையிலிருந்து தொடங்கலாம். இச்சிலை ஒரு வழிபாட்டு உருவாகத்தான் அந்த சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளது. இச்சிலையை உருவாக்கியவர்கள் அதனை ஒரு வழிபாட்டு நோக்கத்தையும் மனதில் வைத்து உருவாக்கியிருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. அப்படியென்றால் தங்களுடைய இஷ்ட தேவதையை சிலையாக்கும்போது அதன் அழகியல் முழுமை குறித்து ஆகக்கூடிய பட்ச கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவர் தனக்கு மிகவும் பாசத்துக்குரிய தன் தாய்க்கு ஒரு சிலை வைக்கும்போது அச்சிலை தாயைப் போலவே இருக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பார் ? அது வேறு யாரையோ போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? இல்லைத்தானே? இது ஆஞ்சநேயருக்கும் பொருந்தும்.

ஆஞ்சநேயரின் ஆகிருதியைக் காட்டுவதுதான் சிலையின் நோக்கம் என்றால் அதற்கென்று செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குரிய துறைசார் நிபுணர்களை அணுக வேண்டும். அதை ஒரு தவமாகச் செய்ய வேண்டும். ஆனால் மருதனார்மடம் ஆஞ்சநேயர் தமிழ் அழகியலின் வீழ்ச்சியின் குறியீடாக நிற்கிறார். அவருடைய முகத்துக்கும் உடலுக்கும் இடையிலான அளவுப் பிரமாணம் பிழைத்து விட்டது. அதனால் அது ஒரு கறாளையான சிலை.

இத்தனைக்கும் அச்சிலை இருப்பது யாழ் பல்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறை அமைந்திருக்கும் வளாகத்தில் இருந்து சில நூறு மீட்டர் தொலைவில்தான். ஆனால் பல்கலைக்கழகத்தின் இது சம்பந்தப்பட்ட துறைசார் ஆளுமைகளிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு ஆஞ்சநேயர் சிலை கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது குறைந்தபட்சம் அந்த வளாகம் வளர்ச்சியடைந்த பின்னராவது அது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயின், யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்பிக்கப்படுகின்ற சிற்பம் தொடர்பான அழகியல் அறிவிற்கும் ஆஞ்சநேயருக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. அதாவது அறிவுகும் செயலுக்கும் இடையிலுள்ள இடைவெளி.

இந்த இடைவெளி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பொதுச் சிற்பங்களுக்குப் பொருந்தும்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் மட்டுமல்ல, ஆனையிறவுச் சிவனின் மீதும் அவ்வாறான விமர்சனங்கள் உண்டு. அதை உலோகத்தில் வார்த்திருந்தால் அதன் அழகு மேலும் பொலிந்திருக்கும் என்ற ஒரு கருத்து உண்டு. மேலும் அச்சிலையை வடிவமைக்கும் போதும் அது தொடர்பான துறைசார் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டதா என்ற கேள்வி உண்டு.

சிவ நடனம் எனப்படுவது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதைப் போல ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது. அப் பிரபஞ்ச அசைவை ஒரு அசையாச் சிலைக்குள் கொண்டு வருவதற்கு மகத்தான சிற்பிகள் தேவை. அசையாச் சிலை ஒன்று பிரபஞ்சப் பேரசைவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அது ஒர் அழகியல் சவால். சுந்தர ராமசுவாமி கூறுவதுபோல ஒரு வேட்டை நாயின் பாய்ச்சலை ஒர் ஒளிப் படத்துக்குள் கைப்பற்றுவது போல.

ஆனால் நடராஜர் சிலையை வடிவமைக்கும்போது அது தொடர்பான துறைசார் நுட்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உரிய துறைசார் நிபுணர்களோடு அது தொடர்பாக உரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. இது ஆஞ்சநேயருக்கும் நடராஜருக்கும் மட்டுமல்ல, முத்திரச் சந்தையடி சங்கிலியன் சிலையும் உட்பட, தமிழில் பெரும்பாலான பொது வெளிச் சிற்பங்களுக்கும் பொருந்தும்.





தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு தூண்களில் தொடங்கி முள்ளிவாய்க்கால் நினைவுச் சிற்பம் வரையி லும் நிலைமை அப்படித்தான் காணப்படுகிறது. உரும்பிராயில் சிவகுமாரன் சிலையில் தொடங்கி வவுனியாவில் பத்மநாபா சிலை வரையிலும் நிலைமை அதுதான். அவரவர் தன் வசதிக்கேற்ப தன் அழகியல் புரிதலுக்கு ஏற்ப சிலைகளை உருவாக்குகிறார்கள். ஆனால் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை பிற நாட்டவர்கள் கண்டு பிரமிக்கும் அளவுக்கு வெளிப் படுத்த வேண்டும் என்ற அடிப்படை விஷயத்தைத் தவற விடுகிறார்கள்.

இதில் ஆகப்பிந்தியது கடந்த வாரம் திருநெல்வேலிச் சந்தியில் திறக்கப்பட்ட மணிக்கூட்டுடன் கூடிய ஓர் அலங்காரத்தூபி. அது யாழ் பல்கலைக்கழக சுற்றுச்சூழலுக்குள் காணப்படும் ஒரு சந்தி. அதுவும் பண்ணைச் சுற்று வளைவைப் போலவே பிற சமூகங்கள் புழங்கும் ஒரு சந்தி. யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு மிக அருகில் காணப்படும் அச் சந்தியில் வைப்பதற்கு அந்த ஊரைச் சேர்ந்த முன்னோடிகள்



அல்லது,நிறுவன உருவாக்கிகள் என்று கூறத்தக்க யாருடைய சிலையும் இல்லையா? கடந்த வாரம் திறக்கப்பட்ட சிறுதூபி தமிழ் மக்களின் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதா? தமிழ்மக்களின் பெருமைகளைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றதா?

ஏன் அதிகம் போவான் யாழ்.பல்கலைக் கழகத்தில் கட்டப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்கூட ஒர் அழகியல் முழுமை என்று கூற முடியாது.

> **அரசியலில் அவ்வாறு துறைசார் நிபுணத்துவத்தைப் புறக்கணிப்பது அல்லது சட்டக் கண்களால் எல்லாவற்றையும் அளப்பது என்பது எத்துணை பாரதூரமானது என்பதனைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கண்டோம்.**

அதிர்ச்சியூட்டும் நவீனம் என்று கூற முடியாது. உலகிலுள்ள இதுபோன்ற நினைவுச் சின்னங்களோடு ஒப்பிடுகையில் அது மிகவும் சாதாரணமானது.

ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னத்தின் நிலைமை அதுவென்றால், அதுவும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் தனது உயர்கல்வி நிறுவனத்தில் அப்படித்தான் ஒரு நினைவுத் தூபியைக்க கட்டுமென்றால், அதிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் ஏனைய பொது வெளிச்சிற்பங்கள் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை. இது ஒரு பொதுவான போக்காக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பொதுவெளிச் சிற்பங்களை உருவாக்கும் பலரும் அது தொடர்பான துறைசார் நிபுணர்களை அணுகுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதில் மிக அருந்தலான புறநடைகளை உண்டு. அப்புறநடைகள் யாவும் அதற்குரிய துறைசார் அறிவுடையோரால் உருவாக்கப்பட்டவை.

இவ்வாறான சிலைக் கலாசாரத்தின் பின்னணியில், சிலை அரசியலின் பின்னணியில்,பண்ணைச் சுற்றுவளைவில் நிறுவப்பட்டிருக்கும் திருவள்ளுவரை இனிப் பார்ப்போம். அச்சிலைக்குப் பின்னால் உள்ள மொழி, மத அரசியல் குறித்து ஏற்கனவே சமூகவலைத் தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக வாதப்பிரதிவாதங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. இங்கு அச்சிலையின் அழகியல் அம்சங்களை மட்டும் கவனிப்போம்.

கண்ணாடி நாரிழையில் செய்யப்பட்ட அச்சிலையானது தமிழ்நாட்டைச் சேர்ந்த விஜிபி குழுமத்தின் தலைவர் சந்தோசம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். இலங்கையின் எல்லா மாவட்டங் களுக்கும் மொத்தம் 18 சிலைகளை அவர் வழங்கியி ருக்கிறார். அதில் இரண்டு வடக்கு கிழக்குக்கு. ஒன்று திருகோணமலைக்கு. மற்றது யாழ்ப்பாணத்திற்கு. இச்சிலைகள் யாவும் வழமையானவை. அவற்றின் அழகியல் அம்சங்கள் குறித்து விவாதிக்க அதிக மில்லை. ஆனால் பண்ணைச் சுற்று வளைவில் அச்சிலை வைக்கப்பட்டிருக்கும் இடம், அதன் பின்னணி என்பவற்றைத் தொகுத்து பார்க்கும் போது என்ன தோன்றுகிறது?

அச்சிலைக்காகக் கட்டப்பட்ட பீடத்தோடு சேர்த்துப் பார்க்கும்போது அச்சிலை சிறுத்துப் போய்த் தெரிகிறது. முத்தவெளி, டச்சுக்கோட்டை என்பவற்றின் பின்னணியில் அச்சிலையை நிற்கின்ற வள்ளுவராக வடிவமைத்து இருந்திருந்தால் ஒரு பிரமாண்டத்தை காட்டியிருக்கலாம். ஆனால் வீதிச்சுற்று வளைவில் எதைக் கட்டினாலும் அதற்குப் போக்குவரத்துத் துறைசார் வரையறைகள் உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதன்படி ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் எதையும் கட்ட முடியாது. ஆயின் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வெளிக்குள் எப்படிப்பட்ட ஒரு சிலையை ஸ்தாபிப்பது என்பதில் அரசியல் மற்றும் அழகியல் தெரிவுகள் இருக்க வேண்டும். கோட்டை,முத்தவெளி என்பவற்றின் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது அச்சிலை போதாது என்ற உணர்வே எழுகிறது.

இதுதான் பிரச்சினை. இதுதொடர்பில் துறைசார் நிபுணர்களின் அறிவை யாரும் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சிலைகளின் விடயத்தில் மட்டுமல்ல, பொதுவெளிச் சிற்பங்கள், பொதுக் கட்டங்கள் போன்றவற்றில் மட்டுமல்ல, அரசியலும் உட்பட ஈழத்தமிழர்களின் பெரும்பாலான பொதுவிடயங்களில் அறிவுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை. அறிவு தன் பாட்டில் பாடப்புத்தகங்களில் இருக்கின்றது. செயல் தன்பாட்டில் நடக்கின்றது.

அறிவுக்கும் செயலுக்கும் இடையிலான இந்த இடைவெளி அதிகமாக வெளிப்படும் இடமும் அதிக நாசத்தை விளைவித்த இடமும் எதுவென்றால் தமிழ் அரசியல்தான். சிலைகள் கோணல்மாணலாக வருவதோ அல்லது பொருத்தமற்ற இடங்களில் பொருத்தமற்ற அளவுகளில் நிர்மாணிக்கப்படுவதோ அழகியற் சிதைவு மட்டுமே. பண்பாட்டுச் சிதைவு மட்டுமே. ஆனால் அரசியலில் அவ்வாறு துறைசார் நிபுணத்துவத்தைப் புறக்கணிப்பது அல்லது சட்டக் கண்களால் எல்லாவற்றையும் அளப்பது என்பது எத்துணை பாரதூரமானது என்பதனைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கண்டோம். அறிவையும் செயலையும் பொருத்தமான விதங்களில் இணைக்கத் தவறிய ஒரு சமூகம் இப்பொழுது சிலைகளை வைத்துவிட்டு ஆளையாள் தின்று தீர்க்கின்றதா? ●

# சித்தாண்டி வேலோடுமலை முருகனிடம் செல்ல 10 இலட்சம் ரூபா பெறுமதியான படகுப் பாதை

மட்டக்களப்பு, மார்ச் 28

ஈழத்து பழநி என அழைக்கப்படும் கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்ல 10 லட்சம் ரூபா பெறுமதியான படகுப் பாதை வழங்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சர்வாவின் வழிகாட்டலில் முன்நாள் உறுப்பினர்களான கே. துரைரெத்தினம், எஸ். திருநாவுக்கரசு ஆகியோரின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஷ் இதனை ஆலயத்திற்கு வழங்கினார்.

வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்வதானால் சித்தாண்டி சந்தனமடு ஆற்றைக் கடக்க வேண்டும். இதுவரை காலமும் பாதுகாப்பற்ற முறையில் வள்ளங்களில் மக்கள் பயத்துடன் பயணித்து வந்தனர்.

அக் குறையை ஏறாவூர் பிரதேச சபை தீர்த்து வைத்துள்ளது.

அப் படகுப் பாதை கையளிக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை சந்தனமடு ஆற்றில் இடம்பெற்றது.

வைபவத்தில் சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலய தலைவர் .சு.தியாகராசாவிடம் இப் படகுப் பாதை ஒப்படைக்கப்பட்டது.

ஏறாவூர் பிரதேச சபையின் ஆன்மீகப் பணியை பலரும் பாராட்டினர்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

(அ)



# மண்முனைப்பற்றில் 9300 குடும்பங்களுக்கு, தலா 10 கிலோ வீதம் அரிசி விநியோகிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 28

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் 9ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு, தலா 10 கிலோ வீதம் இரண்டு மாதங்களுக்கு அரிசி வழங்கப்படவுள்ளது.

அரிசி வழங்கும் வேலைத் திட்டம் முதற்கட்டமாக நேற்று கிரான்குளம் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் அரிசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜெயச்சந்திரன்,சமுர்த்தி வலய முகாமையாளர் சம்சுதீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# “ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடக்கும்”

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றின் போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் அத்தகைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியை ஆதரிக்க பலர் தயாராக உள்ளனர். சில கட்சிகள் மற்றும் தனிநபர்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியை ஆதரிப்பார்கள். பொது ஜன பெரமுனவிலுள்ள சிலர் விக்கிரமசிங்கவின் பாதையை ஏற்கனவே அங்கீகரித்துள்ளனர், மேலும் சிலர் எதிர்காலத்தில் அவருடன் சேருவார்கள்.

ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் பரந்த கூட்டணியாக எதிர்கொள்வோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு சில வேட்பாளர்கள் மாத்திரமே இருப்பார்கள், அதை மக்கள் எளிதாகத் தேர்ந்தெடுப்பார்கள் - என்றார். (அ)






# நான் ஊழல் புரியவில்லை பழிவாங்கப்படுகின்றேன்

## முன்னாள் காணி ஆணையாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச் 28

**நான் எந்தவித ஊழலும் செய்யவில்லை. இராஜாங்க அமைச்சர் ஒருவரின் பழி வாங்கலாகவே என் மீதான பணிநீக்கம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக மட்டக் களப்பு மாவட்டத்தின் முன்னாள் காணி ஆணையாளர் நே.விமல்ராஜ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2012ஆம் ஆண்டு தொடக்கம் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பணிப்பாளராக கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் உட்பட பல இடங்களில் கடமையாற்றியுள்ளேன். இன்றுவரை நான், எந்தவித குற்றச்சாட்டுக்கும் உள்ளாகவில்லை.

இராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்ற அரசியல்வாதியொருவர், எனக்குத் தொடர்ச்சியான அச்சுறுத்தலையும் அழுத்தங்களையும் வழங்கி வந்தார். குறித்த அரசியல்வாதி, தனது ஆதரவாளர்களுக்கு காணிகளை வழங்குமாறு கடிதங்களை அனுப்பியிருந்தார். ஏக்கர் கணக்கிலும் பேர்ச் கணக்கிலும் காணிகளை வழங்குமாறு கோரியிருந்தார். சில நிறுவனங்களுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை வழங்குமாறு கோரியிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் என்ற அடிப்படையில் அவருக்கான கௌரவத்தை வழங்கும் வகையில், அவரது அலுவலகத்துக்



குச் சென்று,அரச சட்ட திட்டங்களுக்கு மாத்திரமே என்னால் செயற்படமுடியும் என்று எழுத்துமூலம் வழங்கியிருந்தேன். அன்று முதல் என் மீதான பழிவாங்கும் படலம் ஆரம்பமானது.

2021ஆம் ஆண்டு, “இங்கு கடமையாற்ற வேண்டாம் மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டுச்சென்றுவிடு போகாவிட்டால் உனது நற்பெயருக்கு களம் ஏற்படுத்துவேன்” என்று எச்சரிக்கப்பட்டேன்.

புன்னைக்குடா பகுதியில் காணி அளவை இரண்டு தடைவ முன்னெடுக்கப்பட்டதாகவே என் மீதான குற்றம் சுமத்தப்பட்டது.

இலங்கை முதலீட்டு அதிகார சபையின் ஊடாக ஆடைத்தொழிற்சாலையை அமைப்பதற்கு இந்த அனுமதி கோரப்பட்டிருந்தது.

201ஆம் ஆண்டு இதற்காக முதற் தடவை அளவீடு செய்யப்பட்டது. அதனை கையளிக்கும் நேரத்தில், அப்பகுதியில் காணி அபகரிப்பில் செயற்பட்டுவந்த குழுவொன்று மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நீதிமன்றம் செல்லவேண்டிய நிலையேற்பட்டது. அதன் போது, நீதிமன்றம் மீண்டும் அளந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தது.

அக்காலப்பகுதியில், என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தேன். நான் விடுமுறையில் இருந்தேன். நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை யாரும் கேள்விக்கு உட்படுத்தமுடியாது. இது தொடர்பில் நான் மேன்முறையீடு செய்துள்ளேன். நீதிமன்ற அறிக்கைககளை சமர்பித்துள்ளேன். இதுதான் நடந்த உண்மை-என்றார். (அ)



# சிறப்பாக இடம்பெற்றது அன்னமலை சிறிசக்தி வித்தியாலய முப்பெரும் விழா

அம்பாறை, மார்ச் 28

சம்மாந்துறை வலயத்துக் குட்பட்ட அன்னமலை சிறி சக்தி வித்யாலயத்தின் முப் பெரும் விழா வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இம் முப்பெரு விழாவுக்கு பிரதம அதிதியாக நாவிதன் வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன், கௌரவ அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா மற்றும் சிறப்பதிதிகளாக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். அற்புதராஜா, விழா அனுசரணையாளர் தெய்வநாயகம் சிவகுமார் ,பிரபல சமூக செயற்பாட்டாளர் சந்திரசேகரம் ராஜன், ஆலய தர்மகர்த்தாக்களான சுதா சுரேந்திரன் , ரி.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ரி. பிரவிஷன்(150) எஸ். மகிஷா (148)ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் முன்பள்ளியிலிருந்து வருகை தந்த தரம் ஒன்று மாணவர்களை வரவேற்ற அதேவேளை தரம் ஐந்தில் நூறு வீதசித்தி பெற்ற 10 மாணவர்களினதும் விடுகைவிழாவும் ஒருங்கே இடம் பெற்றது.

தரம் 5 புலமைப் பரிசில் ஆசிரியை திருமதி உதயலட்சுமி பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

விடுகை பெற்றுச் செல்லும் மாணவர்கள் மற்றும் வருகை தந்த தரம் 1 மாணவர்களுக்கு விழா அனுசரணையாளர் தெய்வநாயகம் சிவகுமார் பாடசாலை பைகள் உட்பட கற்றல் உபகரணங்களை வழங்கினார். (அ)



# கல்முனையில் மாணவர்களுக்கு சீருடைத்துணி, புத்தகம் வழங்கல்

அம்பாறை, மார்ச் 28

கல்முனை வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சீருடைத்துணிகளும் புத்தகங்களும் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலயத்திலும் சாய்ந்த மருது அல் - ஹிலால் வித்தியாலயத்திலும் இடம்பெற்றது.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் சஹூதுல் நஜீமின் வழிகாட்டலில் கல்முனை வலயத்தின் கீழ் உள்ள 67 பாடசாலைகளில் கல்வி பயிலும் 38,529 மாணவர்களுக்கான சீருடைத்துணிகளும் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

அதிபர்களான ஏ.சி.எம். றிஸாத், யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற வைபவங்களில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம்.எம்.எம். ஜபீர், ரி.கே.பத்திரன, பிரதி அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# புதுவருடத்தையொட்டி 14,000 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி இலவசமாக பகிர்ந்தளிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 28

அரசின் புதிய எழுச்சித் திட்டத்துக்கமைய புதுவருடத்தையொட்டி களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் வருமானம் குறைந்த சுமார் 14ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.



அரசாங்கத்தின் 2022ஃ2023 பெரும்போக நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோக தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி விநியோகம் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2022ஃ2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்பை அரிசியாக்கல் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வு களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஜனாதிபதி பங்கேற்புடனான தேசிய நிகழ்வுக்கு சமாந்தரமானதாக உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 13429 குடும்பங்கள் இத் திட்டத்தில் பயனடைய உள்ளனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமூக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லானது தெரிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகளுக்கு வழங்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் அரிசி 10 கிலோ கிராம் பைகளாக பொதி செய்யப்பட்டு மாதமொன்றுக்கு 10 கிலோ எனும் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளம் பொருளியல் பேராசிரியராக கலாநிதி கணேஸ் சுரேஸ் பதவியுயர்வு

மட்டக்களப்பு, மார்ச் 28

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் கற்கை அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேஸ் சுரேஸூக்கு பொருளியல் பேராசிரியர் பதவி உயர்வுக்கான அங்கீகாரம் பல்கலைக்கழக பேரவையினால் வழங்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் மதிப்பீட்டுக்கு அமைய இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கலாநிதி கணேஸ் சுரேஸ் இலங்கையில் உள்ள பொருளியல் பாட பேராசிரியர்களுக்குள் இளவயதுப் பேராசிரியர் என்பதுடன் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் இளவயதுப் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது கலாநிதி கற்கை நெறியை அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து தொழிநுட்ப பல்கலைக்கழகத்திலும், முதுமாணிக் கற்கைநெறியினை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் தனது இளமாணிப் பொருளியல் சிறப்புக் கற்கை நெறியை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்திருந்தார். (அ)





# ஆப்கானில் பெருவெள்ளம் 180ஐ கடந்தது உயிரிழப்பு!

காபூல், மார்ச் 28

ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழையால் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ள 180இற்கும் மேற் பட்டவர்கள் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனை களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பெரும் பொருளாதார நெருக்கடிகளுக் குள் சிக்கியுள்ள ஆப்கானிஸ்தா னுக்கு உதவுமாறு தலிபான்கள் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெருவெள்ளம் காரணமான 3 ஆயிரத்து நூறுக்கும் மேற் பட்ட வீடுகள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயுள் ளன. அத்துடன், வாழ்வாதார மாக இருந்த ஆயிரக்கணக்கான கால்நடைகளும் உயிரிழந்தன.

இதேவேளை, வெள்ளத் துக்கு 2 இலட்சத்துக்கும் மேற் பட்டோர் பாதிக்கப்பட்டுள்ள னர் என்று தெரிய வருகின்றது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத் தில் வறட்சியால் ஆயிரம் வரை யிலானவர்கள் உயிரிழந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதத்தை அவமதித்தவருக்கு மரண தண்டனை விதிப்பு!

இஸ்லாமாபாத், மார்ச் 28

மத அவமதிப்பு கருத்து களை வட்ஸ் அப் குழுவில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட் டில் பாகிஸ்தானில் இளைஞர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு நகரான மர்தானை சேர்ந்த சையது முகமது ஷான் என்பவர் வட்ஸ்அப் குழுவில் மத அவ மதிப்பு கருத்துக்களை பதிவிட் டார் என்று கைது செய் யப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கு பெஷாவர் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றில் கடந்த 2 ஆண்டு களாக நடந்து வந்தது. இந்த நிலையில் அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. சையது முகமது ஷானின் கைபேசியை தடயவியல் சோதனைக்கு உட் படுத்தியதில் அவர் மத அவம திப்பு கருத்துக்களை பதிவிட் டமை உறுதிப்படுத்தப்பட்டது.

# அகதிகள் படகுகள் விபத்து; துனீசியாவில் 29 பேர் மரணம்!



டர்ஜன், மார்ச் 28

துனீசியாவின் கடற்கரையில் இரு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளா னதில் 29 புலம்பெயர் கோரிக் கையாளர்கள் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து இத்தாலியை அடையும் நோக் கில் மத்திய தரைக் கடலை கடக்க முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 2,500 புலம்பெயர்ந் தோர் இத்தாலிக்கு சொந்தமான லாம்பெடுசா தீவில் தஞ்சம் அடைந்துள்ளனர். அகதிகளின் தொடர் வருகை - மற்றும் இறப்புகளால் இத்தாலிய அதிகாரிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துனீசியா ஐரோப்பாவுக்கு செல்ல விரும்பும் புலம் பெயர்ந்தவர்களின் மையமாக மாறியுள்ளது. இந்த ஆண்டு இத்தாலியில் தரையிறங்கிய 12 ஆயிரம் புலம்பெயர்வாளர்கள் துனீசியாவை இடைத்தங்கலா கப் பயன்படுத்தியுள்ளனர் என்று ஐ. நா. கூறியுள்ளது. இது கடந்த ஆண்டு வெறுமனே 1,300ஆகவே காணப்பட்டது. (ஐ)

# அணு ஆயுத பணய கைதியாக பெலாரஸை ரஷ்யா வைத்துள்ளது!

## உக்ரைன் குற்றச்சாட்டு

கீவ், மார்ச் 28

பெலாரஸை அணு ஆயுதப் பணயக் கைதியாக ரஷ்யா வைத்திருக்கிறது என்று உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஓராண்டை கடந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்ய ஜனா திபதி புடின் நட்பு நாடான பெலாரஸில் முக்கியமான அணு ஆயுதங்களை நிலை நிறுத் தப்போவதாக அறிவித்துள் ளார். இதுதொடர்பாக நானும் பெலாரஸ் ஜனாதிபதி அலெக் சாண்டர் லுகாஷென்கோவும் ஒப்புக்கொண்டோம் என்றும் புடின் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பெலாரஸை அணு ஆயுதப் பணயக் கைதியாக ரஷ்யா வைத்திருப்பதாக உக்ரைனின் தேசிய பாதுகாப்பு செயலாளர் டேனிலோவ் குற்றம்சாட்டி உள்ளார். ரஷ்யாவின் இந்த நட வடிக்கையானது உள்நாட்டின் ஸ்திரமின்மையை நோக்கிய ஒரு நகர்வு என்றும், புடினின் அறிவிப்பு பெலாரஸ் மக்களி டையே ரஷ்யா மீதான எதிர் மறையான கருத்தை அதிகரிக் கச் செய்யும் என்றும் அவர் கூறி னார்.

2022 பெப்ரவரியில் பெலா ரஸ் அரசு, ரஷ்ய படைகளை தனது நாட்டில் இருந்து உக் ரைன் மீதான படையெடுப் பைத் தொடங்க அனுமதி அளித் தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹொங்கொங்கில் 2020இற்கு பின் முதலாவது மக்கள் போராட்டம்!

## கடும் கண்காணிப்பின் கீழ் நடந்தது

ஹொங்கொங், மார்ச் 28

இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் ஹொங்கொங்கில் முதல் போராட்டம் நடைபெற் றுள்ளது. பொலிஸாரின் கடும் கட்டுப்பாடுகள் - கண்காணிப் பின் கீழ் இந்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் 100 பேர் மட்டுமே பங்கேற்க அனு மதிக்கப்பட்டனர். அவர்கள் குறியீட்டு அடையாளங்களை அணிய வேண்டும் என்று பொலி ஸாரால் கட்டாயப்படுத்தப் பட்டனர். அத்துடன், பேரணி யில் பயன்படுத் தப்பட்ட பதா தைகள் முற் கூட்டியே ஆய் வுக்கு உட்படுத்தப்பட்டன.

பேரணியின்போது ஊடகங் களையும் எதிர்ப்பாளர்களையும் தனித்தனியாக ஒரு சுற்றிவளைப் பின்கீழ் பொலிஸார் வைத்திருந் தனர்.



சுயாட்சி பிரதேசமாக இருந்த ஹொங்கொங் 2019ஆம் ஆண்டு பீஜிங்கின் நேரடி கண் காணிப்பின்கீழ் வந்தது. இதற்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தன. எதிர்ப்பாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிலருக்கு கடுமையான சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. பலர் காணாமல் ஆக்கப்பட் டனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், 2020ஆம் ஆண்டு முதல் போராட்டம் ஹொங்கொங்கில் முழுமையாக தடுக்கப்பட்டது. இந்த நிலை யிலேயே நேற்று முன்தினம் சிறிய பேரணிக்கு கடுமையான கண்காணிப்பு - கட்டுப்பாடு களுடன் சீன அரசு அனுமதி அளித்தது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஆரோக்கிய வாழ்வு வாழ்வோரில் அதிகம்பேர் பிரிட்டனில் இந்துகள்!

லண்டன், மார்ச் 28

இங்கிலாந்தில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இணைய வழியில் மக்கள் தொகை கணக் கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்படி, இங்கிலாந்து மக்கள் தொகையில் 82 சதவீதத் தினர் நன்றாக உள்ளனர். ஆனால், இந்துக்களில் இந்த ஆரோக்கிய விகிதம் 87.8 சத வீதமாக உள்ளது. கல்வி விகிதத் தில், நிலை 4 மற்றும் அதற்கு மேலும் (சான்றிதழ் நிலை) படித்தவர்கள் எண்ணிக்கை 33.8 சதவீதம் ஆகும். ஆனால் இந்துக்களில் இது 54.8 சத வீதம் ஆகும்.

கணக்கெடுப்பில் மதத்தைத் தெரிவிப்பது சுய விருப்பத்தைப் பொறுத்ததுதான். இங்கிலாந் தில் 94 சதவீதத்தினர் தங்கள் மதத்தைத் தெரிவித்துள்ளனர். ஒட்டு மொத்த மக்கள் தொகையை விட கிறிஸ்தவர் கள் ஆரோக்கியம் குறைவாக இருக்கின்றனர் என்று தெரி வித்துள்ளனர்.

ஏற்கனவே வெளியான முந்தைய புள்ளி விவரம், இங்கிலாந்தில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை முதன்முறையாக மக்கள் தொகை எண்ணிக்கை யில் பாதிக்கும் கீழாகக் குறைந்து விட்டதைக் காட்டியது. இந் துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர் கள் மக்கள் தொகை அதிகரித்து இருந்ததும் தெரிய வந்தது. (ஐ)



## மேற்கிந்தியாவை வீழ்த்தி தென்னாபிரிக்கா சாதனை!

### ரி -20 போட்டியில் 500 ஓட்டங்கள் குவிப்பு

செஞ்சூரியன், மார்ச் 28

விறுவிறுப்பை ஏற்படுத்திய மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபது - 20 போட்டியில் தென்னாபிரிக்கா புதிய உலக சாதனை படைத்துள்ளது.

செஞ்சூரியனில் நடந்த இரண்டாவது இருபது - 20 போட்டியில் இரு அணிகளுமாக 500 ஓட்டங்களை எட்டிய முதலாவது இருபது - 20 போட்டி என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இருபது - 20 தொடரின் முதல் போட்டியை கைப்பற்றியது. இந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் இரவு நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 5 விக்கெட்கள் இழப்புக்கு 258 ஓட்டங்களை குவித்தது.

259 என்ற கடினமான இலக்கை நோக்கி இலகுவாகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணிக்கு தொடக்கம் கொடுத்த குயின்ரன் டி கொக் அநாயசமாக 43 பந்துகளில் (9 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள்) சதம் தொட்டார். இது இருபது - 20 கிரிக்கெட்டில் பெறப்பட்ட ஆறாவது வேகமான சதமாக அமைந்தது. சதத்தை தொட்ட அடுத்த பந்திலேயே கொக் ஆட்டமிழந்தார்.

அவருடன் இணைந்து தொடக்கம் கொடுத்த ரீசா ஹென்றிக்ஸ் 28 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 68 ஓட்டங்களை குவித்தார்.

18.5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கான 259 ஓட்டங்களை தென்னாபிரிக்கா பெற்றது.

இறுதியாக அய்டன் மார்க்ரம், ஹென்றிக்ஸ் கிளாசன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மார்க்ரம் 4 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 21 பந்துகளில் 38 ஓட்டங்களையும், கிளாசன் 3 பௌண்ட்ரிகளுடன் 7 பந்துகளில் 16 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆரம்பம் சிறப்பாக வாய்க்கவில்லை. எனினும் ஆரம்ப வீரர்களில் ஒருவரான கெயில் மேயர்ஸ் 51 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். மூன்றாவது வீரராகக் களம் புகுந்த ஜோன்சன் சார்ள்ஸ் அபாரமாக ஆடினார்.

இந்த இருபது - 20 போட்டியில் இரு அணிகளின் ஆட்டங்களிலுமாக 35 சிக்ஸர்கள் விளாசப்பட்டன. இதில் 11 சிக்ஸர்களுக்கு காரணமாக இருந்தவர் மேற்கிந்தியத்தீவுகளின் ஜோன்சன் சார்ள்ஸ். ஏனெனில் அவர் இருபது - 20 கிரிக்கெட்டில் வேகமான இரண்டாவது சதத்தை விளாசியிருந்தார். அவர் 39 பந்துகளில் 9 சிக்ஸர்களுடன் 9 பௌண்ட்ரிகளுடன் சதம் தொட்டார். அவர் 46 பந்துகளில் 118 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர்களும் அதிரடியாக ஆடினார்கள். பாவல் 28, ராமரியோ ஷெபார்ட் ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 41 ஓட்டங்களை குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மகளிர் பிறீமியர் லீக் மும்பை சம்பியன்!



மும்பை, மார்ச் 28

முதலாவது மகளிர் பிறீமியர் லீக் இருபது -20 தொடரில் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது ஹர்மன் பிரீத் கவுர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி.

மும்பையில் நடந்த இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி கப்பிட்டல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தலைவியும் நட்சத்திர வீராங்கனையான மைக் லெனிங் உடன் ஷெபாலி வர்மா தொடக்கம் கொடுத்தார்.

4 பந்துகளை சந்தித்த ஷெபாலி தலா ஒரு சிக்ஸர், பௌண்ட்ரியுடன் 11 ஓட்டங்களுக்கு இரண்டாவது ஓவரிலேயே ஆட்டமிழந்து அணியின் சரிவை தொடக்கி வைத்தார். இதன்பின் வந்தவர்களில் பெரிதாக யாரும் சோபிக்கவில்லை.

ஓரளவுக்கு நிலைத்து ஆடி 35 ஓட்டங்கள் சேர்த்திருந்த கேப்டன் மைக் லெனிங்கை மும்பை வீராங்கனைகள் அமன்ஜோத் கவுர் மற்றும் யாஸ்திகா பாட்டியா இணைந்து ரன் அவுட் செய்ய ஆட்டம் முழுமையாக மும்பை வசமானது.

20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு டில்லி அணி 131 ஓட்டங்கள் எடுத்தது.

மும்பை தரப்பில் பந்துவீசிய இஸ்ஸி வோங், ஹேலி மத்தியூஸ் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர். 132 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்குடன் களமிறங்கிய மும்பை அணிக்கு ஹேலி மத்தியூஸ் மற்றும் யாஸ்திகா பாட்டியா தொடக்கம் கொடுத்தனர். இந்த இணை சரி யான தொடக்கம் கொடுக்க தவறினாலும், இந்தத் தொடரில் அந்த அணிக்கு நம்பிக்கை நட் சத்திரமாக விளங்கிய நாட் ஷிவர் பிரன்ட் மீண்டும் ஒரு முறை கைகொடுத்தார்.

3 ஓவர்களுக்கு 23 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்கள் என தடுமாறி இருந்த அந்த அணியை நாட் ஷிவர் பிரன்ட் தனது பொறுப்பான ஆட்டத்தால் மீட்டெடுத்தார். அவருக்கு பக்கபலமாக அணித் தலைவி ஹர்மன் பிரீத் கவுர் விளையாடினார். அவர் 37 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தாலும், கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த நாட் ஷிவர் பிரன்ட் 60 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிபெற வைத்தார்.

19.3 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 134 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றிபெற்றது. இதன்மூலம் முதலாவது மகளிர் பிறீமியர் லீக் இருபது - 20 தொடரில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றி சாதித்துள்ளது மும்பை அணி. (ஐ)

# பாகிஸ்தானுடனான ரி - 20 தொடர் ஆப்கான் வசமானது!



ஷார்ஜா, மார்ச் 28

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் தொடர்ச்சியாக இரண்டாவது போட்டி யையும் வெற்றிகொண்டு தொடரைக் கைப்பற்றியது ஆப்கானிஸ்தான் அணி.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் ஷார்ஜாவில் நடக்கிறது.

இதில் முதலாவது போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்று அசத்தியது. இதையடுத்து இரு அணிகள் இடையிலான 2வது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி கடந்த ஆட்டத்தை போல் ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சை தாக்குபிடிக்க முடியாமல் ஓட்டங்களை எடுக்க தடுமாறியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் சைம் அயூப் 0 ஓட்டம் முகமது ஹாரிஸ் 15 ஓட்டம், அடுத்து வந்த ஷாபிக் 0 ஓட்டத்திலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து களம் இறங்கிய இமாத் வசீம் மட்டும் நிலைத்து நின்று விளையாடி அரைச்சதம் அடித்தார். இமாத் வாசிம் 64 ஓட்டம், ஷதாப் கான் 32 ஓட்டம் எடுத்தனர். இதனால் அந்த அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 130 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதையடுத்து 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி மட்டுமின்றி தொடரையும் கைப்பற்றலாம் என்ற நிலையில் ஆப்கானிஸ்தான் களம் புகுந்தது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரஹ்மத்துல்லா குர்பாஸ் 44 ஓட்டம், உஸ்மான் கானி 7 ஓட்டம், அடுத்து வந்த இப்ராகிம் ஜட்ரான் 38 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அந்த அணி 19.5 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 133 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை 2-0 என ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது. (ஐ)

## மியாமி ஓப்பன் ரென்னிஸ் மெத்வதேவ் 3ஆவது சுற்றில்

மியாமி, மார்ச் 28

அமெரிக்காவில் மியாமி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடக்கிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீரர் டெனில் மெத்வதேவ் (ரஷ்யா), கார்பல்லேஸ் பாவ்னா (ஸ்பெயின்) உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மெத்வதேவ், 6-1, 6-2 என்ற நேர் செற்றில் ஸ்பெயின் வீரர் கார்பல்லேஸ் பாவ்னாவை துவம்சம் செய்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)



# ஐ.எம்.எப் நிதியுதவியால் நாட்டை மீட்க முடியுமா?

## கேள்வி எழுப்புகிறார் பொன்சேகா



**கொழும்பு, மார்ச் 28**

**சர்வதேச நாணய நிதியித்தின் நிதியுதவியினால் மட்டும் நாட்டை மீட்டெடுக்க முடியுமா என்று பாராளு மன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பி யுள்ளார்.**

கம்பஹா களனி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட தீப்பந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மின்கட்டண அதிகரிப்பு உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து கம்பஹா களனிப் பிரதேசத்தில் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலான கோஷங்களை எழுப்பியவாறும் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் "வாழ்வாதார செலவீனத்தை குறையுங்கள்" "வரிச்சுமையை குறையுங்கள்" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மேலும் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா,

நாட்டின் நெருக்கடிகளால் மக்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மூன்று வேளைகளும் உணவு உண்ண முடியாது திண்டாடும் நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மின்கட்டணம், நீர்க்கட்டணத்தை செலுத்த முடியாத நிலைமையும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தொழிற்துறைகள் செயலிழந்து காணப்படுகின்றன.

இதற்கு மத்தியில் நாட்டின் ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியம் என்று கூறி மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

மக்கள் ஆணையை நிருபிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் மக்களுக்கு வழங்க இந்த அரசாங்கம் மறுத்து வருகின்றது.

இவை அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவித்தும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறும் கோரியுமே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியினால் மட்டும் நாட்டை மீட்டெடுக்க முடியுமா?

330 மில்லியன் டொலரே தற்போது நாட்டுக்கு கிடைத்துள்ளது. அதற்கூடாக எதனை செய்ய முடியும்-என்றார். (அ)

# சு.கவை மறுசீரமைக்க பேச்சு!

கொழும்பு, மார்ச் 28

சிறிலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி அரசுடன் இணைந்து சுயாதீனமாக செயற்படும் அமைச்சர்கள் குழு, மீண்டும் கட்சியில் இணைவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரே, இது தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று வருகின்றனர்.

இப்பேச்சின் அடிப்படையில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இது குறித்து சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவிடம் கேட்டபோது, இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாகவும் அது நடக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# சித்திரை புத்தாண்டுக்கு பின் ஊழல் எதிர்ப்புச் சட்டம் வரும்



கொழும்பு, மார்ச் 28

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஊழல் ஒழிப்பு தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகளில் முக்கியமானது. இதற்கமையவே ஆசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி அண்மையில் அறிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர், நாடாளுமன்றம்கூடும் முதல் சந்தர்ப்பத்திலேயே நீதி அமைச்சரால் மேற்படி சட்டமூலம் முன்வைக்கப்படும்.

ஊழல் ஒழிப்பையே இளைஞர்கள் கோரினர். போராடினர். எனவே, அவர்களின் கோரிக்கையும் இதன்மூலம் நிறைவேறுகின்றது - என்றார். (அ)

# கோட்டாவை ஜனாதிபதியாக்கியதுதான் நாங்கள் இழைத்த வரலாற்று பெரும் தவறு

## பவித்ரா வன்னியாராச்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 28

"அரசியல் அனுபவமற்ற கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்கியதே சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி இழைத்த பெரும் தவறு."

இவ்வாறு பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பண்டாரகம பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

ரணில் விக்கிரமசிங்க அனுபவமுள்ள அரசியல்வாதி. சிறந்த சர்வதேச தொடர்பும் உள்ளது. இவை உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் ஆதரவு வழங்கினோம்.

அரசியல் ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எமக்கு விமர்சனம் இருந்தது. விமர்சனங்களையும் முன் வைத்திருந்தோம். ஆனால் அவை தனிப்பட்ட பிரச்னைகள் அல்ல. அரசியல் ரீதியிலானவை.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாம் சிறப்பாக செயற்பட்டோம். பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால் ஒரு இடத்தில் தவறிழைக்கப்பட்டது. அதுதான் அரசியல் அனுபவமற்ற கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக்கியது-என்றார்.

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 28

எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்தில் 1,400 எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் துஷானி தாபரே தெரிவித்தார்.

வயல், சதுப்பு நிலங்கள், வண்டல் நிலங்கள் மற்றும் சுரங்கங்களில் பணிபுரிபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையில் திறன் பலகையினூடு மகிழ்ச்சிகரமான கற்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலையில் திறன் வகுப்பறையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப வைபவத்தில் ஆசிரியர்கள், மாணவர்களின் பங்குபற்றலுடன் திறன் பலகையினூடு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மிகவும் சிறப்பாக செயற்படுத்தி காட்டியமை வைபவத்தில் கலந்து கொண்ட விருந்தினர்களினால் பாராட்டப்பட்டது.

மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கற்றலில் ஈடுபட்டமை வைபவத்தில் கலந்துகொண்ட பெற்றோர்களினால் பாராட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு அமைப்புக்களும் திறன்பலகைகளை வழங்குவது மட்டுமன்றி குறித்த பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவித்தும் வருகின்றது.

இதற்கு மேலதிகமாக வினைத்திறனுடன் செயலாற்றும் கல்வி வலயங்களுக்கு இரண்டாவது கட்டமாகவும் திறன் பலகைகளை வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன், சிறப்பு விருந்தினராக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் ஆகியோர் பங்கேற்றனர். (அ)






# பயணிகள் பஸ் மீது மோதிய கொள்கலன்

## அதிவேக நெடுஞ்சாலையில் சம்பவம்

காழும்பு, மார்ச் 28

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் பஸ்ஸொன்றின் மீது கொள்கலன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் 15 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு 10.00 மணியளவில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் களுத்துறை வடக்கு, பெல்பொல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பை நோக்கி பயணித்த பஸ் ஒன்று கொள்கலன் லொறியை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 38 பயணிகள் பயணித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பின்னர் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் கொள்கலன் லொறியின் சாரதியை தாக்கினார் என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## ஐ.எம்.எவ்...

கலாநிதி நந்த லால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன ஆகியோர் இது தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்க உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

## மனித...

முறைப்பாட்டை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் செயலாளர் து.தமிழ்ச்செல்வன் கருத்து தெரிவிக்கையில்-

எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை மூலம் பௌத்த ஆக்கிரமிப்பின் வெளிப்பாட்டை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த துன்பியல் சம்பவம் எமக்கு மிகுந்த வேதனை அளிப்பதுடன் இவ்வாறான செயலை செய்தவர்களுக்கு எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலயத்திற்குள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களத்தால் எமக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த திணைக்களத்தின் வாகனங்களே அங்கு தொடர்ச்சியாக சென்று வந்தன. எனவே இந்தச்சம்பவத்தின் பின்னணி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் மீதே நாம் சந்தேகம் கொள்கின்றோம். மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் அவர்களுக்கு எதிராகவே எமது முறைப்பாட்டை பதிவு செய்திருக்கின்றோம்- என்றார்.

இதேவேளை, விக்கிரகங்கள் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாக நேற்றுக் காலை நெடுங்கேணி பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மக்களின்...

யாழ்ப்பாணத்தில் அனைத்து பல்கலைக்கழகத்தினர் கூட்டமொன்றை ஏற்பாடு செய்த சமயத்தில், அங்கு சென்ற சிறு குப்பலொன்று கூச்சலிட்டது. எனினும், அதை பொருட்படுத்தாமல் கூட்டம் நடைபெற்றது.

ஈ.பி.டி.பியினரே மதுபோதையில் கூச்சலிட்டதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டிருந்தது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் நேற்று இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற போர்வையில் ஒரு சிறு கூட்டத்தினர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது அங்கு சென்ற சிலர் அவர்களை வெளியேறுமாறு கோசமிட்டு குழப்பத்தை ஏற்படுத்தினர். அந்த சிலரை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தரப்பினர் என்றும் சுட்டிக்காட்டிய ஏற்பாட்டாளர் ரஜீவ்காந்த் என்ற நபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தது டன் அக்குழப்பத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட தரப்பினர் மது போதையில் இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அச்சம்பவத்துக்கும் அங்கு கூறப்பட்ட கருத்துக்கும் அங்கு சென்றவர்களுக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

அதேவேளை, யாழ் பல்கலைக்கழகச் சமூகமும் குறித்த அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் சந்திப்பை புறக்கணித்திருந்தனர்.

இதனூடாக யாழ் கல்விச் சமூகம் மற்றும் மக்களின் மனநிலையையோ இங்குள்ள தேவைப்பாடுகளையோ குறித்த ஏற்பாட்டாளர்கள் அறிந்திருக்க வில்லை என்பது புலனாகின்றது - என் றார். (அ-3)

## கச்சதீவில்...

கடற்படை ஒரு கடற்படைப் பிரிவை நிறுவியுள்ளது.

அத்துடன் இலங்கை பௌத்த சங்கத்தின் அனுசரணையின் கீழ் கட்டப்பட்ட புனித அந்தோனியார் தேவாலயத்தையும் கடற்படையினர் கவனித்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் கச்சதீவு தேவாலய திருவிழாவைத் தவிர, ஒவ்வொரு நாளும், கடற்படை வீரர்கள் தேவாலய வளாகத்தை சுத்தம் செய்து நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் கச்சதீவில் கடமைகளில் உள்ள கடற்படைப் பிரிவில் பணிபுரியும் பெரும்பாலானோர் பௌத்தர்கள் என்றும் கடற்படையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ஒரு சிறிய புத்தரின் சிலைக்கு மரியாதை செலுத்தி வருவதாகவும் இதனை தவிர, கட்டமைப்புகள் வேறு எவையும் தீவில் அனுமதிக்கப்படவில்லை என்றும் இலங்கையின் கடற்படை கூறியுள்ளது. (அ)

## வெடுக்குநாறி...

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

நேற்று மாலை ஜனாதிபதியுடன் நேற்று மாலை நடத்திய தொலைபேசி உரையாடலில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டமை தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்று மாலை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இது குறித்து நேற்று மாலை ஜனாதிபதிக்கும் அவருக்கும் இடையே நீண்ட தொலைபேசி உரையாடல் இடம்பெற்றது.

வெடுக்குநாறிமலை சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

தமிழர்களின் ஆதி தொட்டு வழிபட்டுவந்த வெடுக்குநாறி மலை பௌத்த தொல்லியல் இடம் என்றுகூறி தொல்பொருள் திணைக்களம் அந்த இடத்தை சுவீகரித்தது. ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாட்டை நிறுத்த பல தடைகள் ஏற்படுத்தப்பட்டு, பூசை வழிபாட்டுக்கும் தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே, தடையை மீறி பூசைகளை முன்னெடுக்க முயன்ற ஆதிசிவன் ஆலய நிர்வாகம் மீது தொல்பொருள் திணைக்களத்தினர் வழக்கு தொடர்ந்திருந்தனர். தொல்பொருட்களை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நிர்வாகத்தினர் மறியலில் வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், ஆதிசிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை தொடர அனுமதிக்க வேண்டும் என்று ஆலய நிர்வாகம் தொடர்ந்த வழக்கில் ஆலயத்துக்கு சாதகமாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தீர்ப்பு கிட்டியிருந்தது. தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பதை மாவை சேனாதிராசா ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அத்துடன் இந்து மக்களின் பாதுகாப்பை உறிதிப்படுத்தும் அதேவேளை, இந்து மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேணும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவரது கோரிக்கைகளுக்கு செவிமடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (அ)

# இலங்கைக்கு எண்ணெய் கொண்டு வர 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்கான கனிம எண்ணெய் இறக்குமதி மற்றும் விநியோகம் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மூன்று நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்த 3 நிறுவனங்களுக்காக தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்படும் விநியோகஸ்தர்களினால் 450 எரிபொருள் நிரப்பு நிலையங்களும், மூன்று நிறுவனங்களினால் தெரிவு செய்யப்பட்ட புதிய இடங்களில் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், சேமித்து வைப்பதற்கும், விநியோகிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் 20 வருடங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# கழிவுநீர் வெளியேறும் குழியில் விழுந்து கொழும்பு மாநகரசபை ஊழியர்கள் பலி!

கொழும்பு, மார்ச் 28

கொழும்பு மாநகர சபையின் தொழிலாளர்கள் இருவர் சேவையில் ஈடுபட்டிருந்த போது, கழிவு நீர் வெளியேற்றும் குழியில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கழிவு நீர் வெளியேற்றும் குழியை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் குறித்த குழியில் விழுந்துள்ளார்.

பின்னர் அவரை காப்பாற்ற மற்றைய நபரும் கழிவு நீர் வெளியேற்றும் குழியில் இறங்கிய வேளை, அவரும் கழிவு நீர் வெளியேற்றும் குழியில் விழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆபத்தான நிலையில் கழிவு நீர் வெளியேற்றும் குழியில் விழுந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரும் 28 மற்றும் 38 வயதுடைய கொழும்பு 10 மற்றும் 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (அ)

# கேக் கொள்வனவு செய்யவேண்டாம்!

கொழும்பு, மார்ச் 28

இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கேக்குகளை கொள்வனவு செய்யவேண்டாம் என்று கோரப்பட்டுள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் இதனை மக்களிடம் அறிவுறுத்தியுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், கொழும்பு துறைமுகத்துக்கு வந்த திரவ முட்டைகள் சுமார் ஏழு நாட்களாக விடுவிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அவை பழுதடைந்திருக்கலாம் என்ற அடிப்படையில், எதிர்வரும் புத்தாண்டுக்கு இந்த முட்டைகளை பயன்படுத்தி கேக் தயாரிக்க வேண்டாம் என்று வெதுப்பக உரிமையாளர்களிடம் அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த இறக்குமதி மூலம் சுங்கம் ஏற்றுமதி - இறக்குமதி சட்டத்தை மீறியுள்ளது.

எனவே பொது சுகாதார ஆய்வாளர்கள் துறைமுகத்திற்குச் சென்று முட்டைகளின் நிலையை பரீட்சிக்கவேண்டும் என்றும் அசேல சம்பத் கோரியுள்ளார்.

## ஈ.பி.டி.பியினர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவர்களே பதாகைகளை ஏந்தியவாறு வந்தனர். அவர்களை பார்க்கும்போது போதையில் இருந்ததாக தோன்றியது. சுமார் 25 பேர் கொண்ட குழு எங்களிடம் வந்து 'அறகலய' வேண்டாம் என்று கூறியது. வடக்கு மக்களை பாதிக்கும் பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர். எங்கிருந்து வந்தோமோ அங்கேயே திரும்பலாம் என்று சொன்னார்கள்.

அச்சுறுத்தல் மூலம் நிகழ்வுகளை நிறுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. தெற்கில் உள்ளவர்களைப் போன்றே வடக்கிலுள்ள தாய் தந்தையர்களுக்கும் பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களது பிள்ளைகள் காணாமல் போயுள்ளனர். சிலர் அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளனர் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவர்களுக்கு இன்னும் ஒரு பிரச்னையாகவே உள்ளது.

அரசாங்கம் டக்ளஸ் தேவானந்தாவின் அடியாட்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி பிரச்னைகளை கம்பளத்தின் கீழ் மறைக்க முற்பட்டால் அதை செய்ய முடியாது.

யாழ்ப்பாண மக்கள் எங்களை திருப்பி அனுப்பி வைத்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இது உண்மையல்ல, அது திருத்தப்பட வேண்டும்- என்றார். (அ)

# நெல் கொள்வனவுக்காக 20 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, மார்ச் 28

பெரும் போகத்தில் நெல் கொள்வனவுக்காக 20 பில்லியன் ரூபா ஒதுக்கிடுவதற்கு அரசாங்கம் தயாராகவிருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசியை இலவசமாக வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் வீரகெட்டிய பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் குறித்த விடயத்தை தெரிவித்தார். (அ)

## வடக்கு...

உள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களை ஒருங்கிணைக்கும் வகையில் இணைத் தலைவராக வடக்கு ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வீதியில்...

கொழும்பில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் இறக்கிவிட்டு திரும்பிச் செல்லும் போதே விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பரந்தனைச் சேர்ந்த 27 வயதான குமாரசாமி சுஜீபன் என தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# அரசியலமைப்பில் மாற்றம் தயாராகி வருகிறார் ரணில்?

## ஆளும் கட்சிக்கும் அவர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

அரசியலமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு தயாராகி வருகிறார் என விசேட நபர் ஒருவரின் ஊடாக ஜனாதிபதி, ஆளும் கட்சிக்கு அறிவித்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பில் அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்த அவர் தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி 4 வருடங்களின் பின்னர் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த முடியும்.

எவ்வாறாயினும் பதில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒருவருக்கு தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் குறித்த சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

இந்தநிலையில் பதில் ஜனாதிபதி ஒருவர் நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் வகையில் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார்.

அதற்கு தேவையான சட்ட விதிமுறைகளை அமைப்பதே குறித்த அரசியலமைப்புத் திருத்தத்தின் நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பில் அவ்வாறான திருத்தத்தை மேற்கொள்ளாவிட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த 2025ஆம் ஆண்டு வரை காத்திருக்க நேரிடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# ஆட்சிக் கவிழ்ப்பு சதிக்கு இடமில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 28

எந்தச் சூழ்ச்சித் திட்டங்களாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாட்டு மக்கள் தற்போது என் பக்கமே நிற்கின்றார்கள். சர்வதேச சமூகமும் எனக்கு ஆதரவு வழங்குகின்றது. அதனூடாகவே சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்கு அங்கீகாரம் கிடைத்தது. இந்நிலையில், தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் - பணிப்புறக்கணிப்புக்கள் மூலம் எதனையும் சாதிக்க முடியாது.

வரி விதிப்பு தவிர்க்க முடியாத ஒன்று. சர்வதேசத்திடமிருந்து வாங்கிய - வாங்குகின்ற கடனை அடைக்க வரி விதிப்பு மிகவும் அவசியம். அரசுக்கு மிரட்டல் விடுக்கும் தொழிற்சங்கத்தினர் இது குறித்து அறிந்திருப்பார்கள்.

எதிர்க்கட்சிகளுக்குள் பிளவுகள் இருப்பது போல் தொழிற்சங்கங்களுக்குள்ளும் பிளவுகள் உள்ளன. இவற்றில் சுயலாப சிந்தனை கொண்டவர்கள் போராட்டங்களை நடத்துகின்றார்கள் - என்றார். (அ)

# வெடுக்குநாறிமலை ஆலயம் இடித்தழிப்பு யாழ்.பல்கலை மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் சிவலிங்கம் இடித்தழிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டம், யாழ். பல்கலைக்கழக முன்றிலில் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் மண் திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, வெடுக்குநாறி மலை, கச்சதீவு, நெடுந்தீவு எங்கள் சொத்து, காவிகளின் அட்டகாசத்துக்கு முடிவில்லையா, இராணுவமே வெளியேறு கடற்படையே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், தொல்பொருட் திணைக்களமே வெளியேறு போன்ற கோஷங்களை எழுப்பினர். (அ)




# கொழும்பு பேராயரின் மனுவை பரிசீலிக்க நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 28

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் குறித்த மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போது உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை மே மாதம் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்தது.

பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவற்றை நடைமுறைப்படுத்த சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியுள்ளார். (அ)

# உள்நாட்டுப் பால்மாவின் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச் 28

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளபோதிலும், உள்நாட்டு பால் மாவின் விலையில் மாற்றம் செய்ய முடியாது என நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பால் மா ஒரு கிலோ 200 ரூபாவாலும் 400 கிராம் பால் மா ஒன்றின் விலை 80 ரூபாவாலும் குறைக்க பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 1,240 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் பால் மாவின் புதிய விலை 1,160 ஆகவும், 1 கிலோ பால்மா விலை 3,100 ரூபாவில் இருந்து 2,900 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடன் பெறுவது தொடர்பில் டில்லியுடன் கொழும்பு பேச்சு

கொழும்பு, மார்ச் 28

இந்தியாவிடமிருந்து சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்களை இலங்கை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் மூத்த பொருளாதார நிபுணருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கடன் தொகையானது இந்திய ரூபாவில் பெறப்படும் என்றும், கடன் தொகையின் பெறுமதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கடன் பெறுமதி ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை அண்மித்திருக்கும் என்றும், இந்தப் பணம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத்துக்குப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)


# மரண அறிவித்தல்



தோற்றம் 11 - 06 - 1962

மறைவு 20 - 03 - 2023

## கனேசன் பத்மசோதி

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட கனேசன் பத்மசோதி கடந்த 20-03-2023 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், இரெத்தினம் - பாக்கியம் தம்பதியர், ரெத்னம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனேசன் (நாதஸ்வர வித்துவான்) - சத்தியபாமா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், அனுசியாவின் அன்புக் கணவரும், கருணா, கவி, தர்மா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமானந்தவல்லி, சந்திரசோதி, தேனுகா (கொலண்ட்), சிவசோதி (ஜேர்மனி), சுவர்ணாங்கி (பிரான்ஸ்), இந்துமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற குணசேகரன் (கனடா), விஜயகுமார் (ஜேர்மனி), முரளீஸ்வரன், ஜெயபாலன் (பிரான்ஸ்), நித்தியகௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சர்மிளா, சைந்தவி, அஸ்வத்தாமன், ஆரபி, ஆகாஷ், கௌதமன், கௌசிகன், கௌதமி ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுமிதா அவர்களின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி (நாதஸ்வர வித்துவான்), சின்னராஜா (தவில் வித்துவான்) மற்றும் சந்தான கிருஷ்ணன்(இலங்கை வாழ் நாதஸ்வர வித்துவான்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை (29.03.2023) புதன்கிழமை காலை 09.00 முதல் பிற்பகல் 1.00 வரை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.